விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 30 வியாழக்கிழமை (15.08.2002) தொலைபேசி 3378 ஒலி 239

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு



சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 2480

## சமாதான முயற்சியில் வரலாற்றுப் பதிவு

# நோர்வேயின் தலைநகரில் மிலிந்த - பாலசிங்கம் சந்திப்பு

## செப்.13 இல் சமாதானப் பேச்சு

(நமது நிருபர்)

* ★ வடக்குக் கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகம்
* ★ அரசு - புலிகளுக்கிடையிலான தாய்லாந்துப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரல்
* ★ புரிந்துணர்வு ஒப்பந்த அமுலாக்கம்
* ★ விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடைநீக்கம்



ஆகிய முக்கிய விடயங்கள் குறித்து நோர்வேயின் தலை நகரான ஒஸ்லோவில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதி, இலங்கை அரசு தரப்புப் பிரதிநிதிகள் மற்றும் நோர்வே அரச பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் நேற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முத்தரப்பு பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், இலங்கை அரச தரப்புப் பிரதிநிதிகளான பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதானச் செயலக நிர்வாகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக மற்றும் நோர்வே அரச தரப்புப் பிரதிநிதிகளான வெளிவிவகார அமைச்சர் ஜென் பீற்றர்சன் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மற்றும் சிறப்

(10ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை முஸ்லிம காங்கிரஸ் உறுப்பினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் இனந் தெரியாத குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு புதுக்கடை வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான முகமட் சுரேஸ் பலில் (வயது 43) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

ஓட்டோவில் வந்த குழுவினர் இவரை சுட்டு விட்டு தப்பியோடியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கொழும்பு மாநகர மேயர் பிரசன்னா குணவர்த்தனா ஆகியோர் தமது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். (இ)

## உள்நாட்டு அமைச்சருடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபன்சென், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளின் நகர்வு மற்றும் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் குறித்து இருவரும் பேச்சு நடத்தியுள்ளனர்.

இதேவேளை இலங்கைக்கான தூதுவராக நிரூபன்சென் பதவி ஏற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

(இ)

## பாராளுமன்றுக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

## தனது கட்சி எம்.பிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா பொதுஜன ஐக்கிய முன்னனிப் பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாராளுமன்றத்திலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்திலேயே இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவினதும் மற்றும் பின்வரிசை எம்பிகளினதும் வேண்டுகோளுக்கு அமையவே ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ள சட்டமூலங்கள் மற்றும் ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை அரசினால் கொண்டுவரப்படவுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் சட்ட மூலத்தை எவ்வாறு எதிர்ப்பது அதற்கான வியூகங்களை வகுத்து எவ்

(10ம் பக்கம் பார்க்க)

## சுழல் பந்துவீச்சாளர் முரளி யாழ்ப்பாணம் வருவார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டியொன்றில் கலந்துகொள்ளும் முகமாகவே இவர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

இவருடன் சனத்ஜெயசூரியா மற்றும் முன்னணி வீரர்கள் பலரும்

(10ம் பக்கம் பார்க்க)

## கடற் போக்குவரத்திற்கு கடற்புலிகள் தயார்

(கிளிநொச்சி)

கிழக்குக் கடற்பிரதேசத்தில் கடற் போக்குவரத்தை மேற்கொள்ள விடுதலைப்புலிகளின் கடற்படையின் படையணிகள் தயாராகி வருகின்றது.

கடற்போக்குவரத்து தொடர்பாக விடுதலைப்புலிகள் முன்வைத்த முன்மொழிவுகளை இலங்கை அரசு ஏற்றுள்ள நிலையிலேயே இப்போக்குவரத்தினை கடற்புலிகள் ஆரம்பிக்க உள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து ஏற்பட்டு வந்த க்டற்போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினர்

(10ம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்கு ஆலோசனை வழங்க

# ஜனாதிபதி சந்திரிகா தயாராக உள்ளார்

## ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படுவதையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரும்புகிறார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரீஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்து ஜனாதிபதியின் கருத்துக்களையும் விருப்பங்களையும் தெரிவித்த போதே ஹரீம் பீரிஸ் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆலோசனைகள் தேவைப்பட்டால் அதனை வழங்க ஜனாதிபதி தயாராக உள்ளார்.

நோர்வேயில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் குறித்துப் பேசுவது வரவேற்கத்தக்க விடயம் என்று கூறிய பீரிஸ் விரிவான அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மட்டுவில்தெற்கைச்சேர்ந்த சின்னத்தம்பி கலாபாரதி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல-598180598V கொடிகாமம் யாழ்ப்பாணம் பஸ்ஸில் பாக்குடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சின்னத்தம்பி கலாபாரதி (ஆசிரியை) மட்டுவில்தெற்கு சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(5824)

## இவ்வாண்டுச் சராசரி மழைவீழ்ச்சி 429.8 மி.மீ

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் ஜூலை மாத சராசரி வெப்பநிலையாக 29 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது.

அம்மாத அதியுயர் வெப்பநிலையாக 34 பாகை செல்சியஸ் கடந்த 10ந் திகதியும், தாழ் வெப்பநிலையாக 25.08 பாகை செல்சியஸ் 15ஆம் திகதியும் பதிவாகின.

இவ்வாண்டின் இதுவரை காலப்பகுதிக்கான சராசரி மழைவீழ்ச்சியாக 429.8 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வழிமண்டல ஆராய்ச்சித்திணைக்கள புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

(ஷ-19)

## பாரபட்சமற்ற விசாரணை நடத்த

# தவறின் நிலைமை பாரதூரமாகும்

### தாக்கப்பட்டமை குறித்து முதல்வர் கூட்டணிக்கு எச்சரிக்கை

(தென்மராட்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாழ் மாநகரசபை உறுப்பினர் ஒருவரால் நேற்றுமுன்தினம் தான் தாக்கப்பட்டமை குறித்து யாழ் மாநகரசபையின்முதல்வர் செல்லன்கந்தையன் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு முறைப்பாடு ஒன்றினை நேற்றைய தினம் பக்ஸ் மூலம் அனுப்பிவைத்துள்ளார்.

அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவதுதமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிலுள்ளமாநகரசபையின் முதல்வராகிய என்னை, எமது கட்சியைச் சேர்ந்தமாநகரசபை உறுப்பினர் ஒருவர் தாக்கியமை மிகவும்வேதனைக்குரியதாகும்.

கட்சிக்குள் பேசிமுடிவெடுக்க வேண்டிய விடயங்களை வேறு இடத்தில் பேசி முடிவு எடுக்கமுயன்றமை விரும்பத்தகாதது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிபாரபட்சமற்ற விசாரணையைமேற்கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் நிலைமைகள் பாரதூரமாக மாறக் கூடும் என மாநகர முதல்வர் அம்முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

(உ-77)

## என்னைத் தாக்குவதற்காக

# முதல்வர் கதிரையை தூக்கினார்

### யா.மா.ச.உறுப்பினா அரவிந்தன்தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகர சபைமுதல்வர் செ.சந்தையன் மாநகரசபை அலுவலகத்தில் வைத்துதாக்கப்பட்டதான சம்பவம் குறித்து மாநகரசபை உறுப்பினர் ச.அரவிந்தன்நேற்று பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

மாநகர முதல்வர் மாநகர சபை அலுவலகத்தில்வைத்து தாக்கப்பட்டதாக பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ள செய்திகள்தொடர்பாக அதில் குறிப்பிடப்பட்ட மாநகர சபை உறுப்பினர் என்றவகையில் அச்சம்பவம் சம்பந்தமான உண்மைநிலையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு எனக்கிருப்பதால் கீழ்வரும்விளக்கத்தைத் தருகிறேன்.

ஒட்டுமடத்தைச் சேர்ந்த ஒருவறிய குடும்பத்தினருக்கு சொந்தமான மாடுஒன்று கடந்த 30.07 2002இல் மாநகரசபை ஊழியர்களால்பிடித்துவைக்கப்பட்டிருந்தது இது சம்பந்தமாக என்னிடம் செய்யப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாகவும் நல்லூர் சிவன் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் திருவிழாக் காலங்களில் கடைபோடுவதற்கு மாநகரசபை அனுமதி கொடுக்கமறுத்து வருவதாகக் கிடைத்த முறைப்பாடு சம்பந்தமாகவும் மக்களின் பிரச்சினையை மாநகரசபை அங்கத்தவர் என்றமுறையில் மாநகரமுதல்வருடன் பேசுவதற்காக அவரின் அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன்.

அவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது மாட்டை விடுவிப்பதற்கு முதல்வர் மறுத்துவிட்டு ஆசனத்தை விட்டெழுந்து எங்கோ வாகனத்தில் சென்றுவிட்டார். அதன்பின்நான் ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்து எனது படியிலிருந்து அம்மாட்டுக்குரிய புல்வரியை கழித்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துமாட்டை விடுவித்து உரியவர்களிடம் ஒப்படைத்தேன்.

இதனால் ஆத்திரமடைந்த முதல்வர் கடைவிடயத்தை நான் கதைக்க ஆரம்பித்ததும் என்னைகீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகித்து அவதூறாகப் பேசியதுடன் அருகில் இருந்தகதிரையைத் தூக்கி என்னைத்தாக்க முற்பட்டார் அவ்வேளையில் என்மீது அடிபடுவதைத் தடுக்கும் பொருட்டு நான்கதிரையைப் பிடித்தேன் அவ்வேளையில் தன்னிலைஇழந்த முதல்வர் கதிரையைவிட்டுவிட்டு அருகில் இருந்த கண்ணாடித் தடுப்புகளைக் கையால் தாக்கி உடைத்தார் இதனாலேயே அவர்கைகளில் காயம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

## சுற்றுலா மேற்கொண்டு காந்தரூபன்அறிவுச்சோலை மாணவர்கள்யாழ்வந்தனர்

(மந்திகை)

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள காந்தரூபன் அறிவுச்சோலையில் இருந்து 25 மாணவர்கள் கல்விச்சுற்றிலா ஒன்றை மேற்கெண்டு நேற்று வடமராட்சிக்கு வந்தனர்.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த இவர்கள் குடாநாட்டின் பல்வேறுபகுதிகளையும் சுற்றிப் பார்வையிட்டுள்ளனர்.

வடமராட்சிக்கு வருகை தந்த இம்மாணவர்கள் தீருவிலில் உள்ள குமரப்பா புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினர்.

நண்பகல் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீடு மற்றும்வடமராட்சியின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப்பார்வையிட்டனர். இவர்கள் அனைவரும் இன்று மீண்டும் புதுக்குடியிருப்புக்கு திரும்பவுள்ளனர்.

இதேவேளை காந்தரூபன் அறிவுச்சோலையில் யுத்த நடவடிக்கைகளால் பெற்றோரை இழந்த 200பிள்ளைகள் பராமரிக்கப்பட்டுவருவதுடன் கடந்த 10 வருடங்களாகசெயற்படும்இந்நிலையம் பொது நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் உதவியுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-23)

## நூலகவாரமும் திறப்புவிழாவும்

(மந்திகை)

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தின் நூலகவாரமும்திறப்புவிழாவும் இன்று காலை9.30மணிக்கு பாடசாலை அதிபர் செ.சேதுரஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பெயர்வளைவு புதிய விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன திறந்துவைக்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து சிறப்புரைகளும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன

(இ-23)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் உதவியுடன் யாழ்மாவட்டத்தில் உள்ள கடல்தொழிலாளர்களுக்கு கடன்அடிப்படையில் படகு இயந்திரங்களை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்இன்று பி.ப 1.30மணிக்கு வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசப் பணிமனையில் அதன் தலைவர் எஸ.தவரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(உ-6)

## விவசாயிகள் விழிப்புணர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் விவசாயிகள் விழிப்புணர்வு நிகழ்வும் பத்திரிகையாளர் கருத்தரங்கும் நாளை 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில்ஹற்றன் நஷனல் வங்கியின் நிர்வாக இயக்குநர் ரென்சி விஜயதிலக மற்றும் கூட்டுறவுமுகாமைத்துவஉறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை பி.ப 3 மணிக்கு வங்கியின் சிங்கிதி சிறுவர் நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

(உ)

## கடற்றொழிலாளர் சங்க சமாசம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசம் அமைக்கும் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமு.ப.10.00 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப்பிரதேசத்தில் இயங்கும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு மேற்படி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(உ-75)

## யூனியன் அசூரன்ஸில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காப்புறுதி நிறுவனமான யூனியன் அசூரன்ஸின் விற்பனைப் பிரதிநிதிகளுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு ஸ்ரான்லிவீதியில் அமைந்துள்ள மேற்படிநிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது-

(த,19)

★ ஜேர்மன், நெதர்லாந்து தூதரக பிரதிநிதிகள்

# மக்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆராய்வு

(தென்மராட்சி)

யாழ் குடாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்த நடைமுறையின் பின்னர் மக்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அறியும் பொருட்டு கொழும்பிலுள்ள ஜேர்மன் மற்றும் நெதர்லாந்து தூதரகங்களின் இரண்டாவது செயலாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் நேற்று இராணுவத்தரப்பினர் மற்றும கடற்படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினர் ஆகியோரைச் சந்தித்து தாம்வந்துள்ளதன் நோக்கம் குறித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

பின்னர் பிற்பகல் வேளை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை இணைய அலுவலகத்தில் சந்தித்து யாழ். குடாநாட்டு மக்களின் எதிர்காலம், அரசு புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள், இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதில் ஏற்படும் தாமதங்கள் ஆகியன குறித்து கலந்துரையாடினர்.

(உ-77,43)

## தொழில் நீதிமன்றங்களில் 15ஆயிரம்வழக்குகள்தேக்கம்

(கொழும்பு)

தொழில் நீதிமன்றங்களில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படாத வழக்குகளை கையாள்வதற்குப் புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தொழிற்சாலைகள் சட்டங்களைச் சட்ட திருத்த மூலம் மீதான விவாதத்தின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இணக்கசபைகளிலும் உள்ள வழக்குகளை தீர்க்க புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், தொழில் நீதிமன்றத்தில் சுமார் 15 ஆயிரம் வழக்குகள் தேங்கிக்கிடப்பதாகவும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## விதை நெல் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

அம்பன், புலோலி கமநல சேவை நிலையங்களின் சேவைப்பிரிவுக்கு உட்பட்ட, 2002/2003 பெரும் போக நெற் செய்கைக்கு விதை நெல் தேவைப்படும் விவசாயிகளை, தமக்கு வேண்டிய நெல்லின் இனம்,அளவு போன்ற விபரங்களுடன் தத்தம் பகுதி விவசாய சம்மேளனங்களூடாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் எம்.ரவிச்சந்திரன் கேட்டுள்ளார்.

(ஷ)

## யாழ் இனிப்பு உற்பத்தியில் றொட்மின்பீ பயன்படுகிறது

### வைத்திய கலாநிதி ராதா எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள உற்பத்தி நிறுவனம் ஒன்றினால் உற்பத்தி செய்யப்படும் இனிப்பு வகையொன்றில் இலங்கையில் தடைசெய்யப்பட்ட நிறமான றொட்மின்பீ என்ற நிறமூட்டி பாவிக்கப்பட்டுள்ளதாக வைத்திய கலாநிதி க.ராதா தெரிவித்துள்ளார்.

அண்மையில் உணவுப் பரிசோதகர் இந்த இனிப்பு வகையின் மாதிரியை பகுப்பாய்வு செய்த போதே இவ்வர்ணம் பாவிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வர்ணத்தை உணவிற்குப் பாவிப்பதால் அபாயகரமான விளைவுகள் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டே இந்த நிறம்தடை செய்யப்பட்டதாகவும் எனினும் சிவப்பு நிற இனிப்புக்களின் உற்பத்திக்கு இவ்வர்ணமே பயன்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## சட்ட மூலம் நிறைவேறியது

(கொழும்பு)

சிவில் வழக்குகள் தொடர்பான விதிகளைத் திருத்தும் சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் திருமணமான பெண்கள் வழக்குகளின் பொறுப்பாளர்களாக ஆஜராகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் டபிள்யூ.எ.எம் லொக்கு பண்டார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

(5)

# ஜனாதிபதியுடனும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்

## ஹரீம் பீரிஸ் அறிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு வடக்கு-கிழக்கு பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அதிகாரத்தைபகிர்ந்து கொள்ள தயாராக இருப்பது போன்று, தெற்கில் ஜனாதிபதியுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் விடுத்துள்ளஅறிக்கையில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கமே நிறைவேற்று அதிகார அரசியல் அமைப்பை உருவாக்கியது.

நாடாளுமன்றம் கலைக்கப் படக்கூடிய என்றஅச்சம்ஆளும் அரசின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எனினும், தேசிய நலனை கருத்தில்கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்றத்தை கலைக்கும் உத்தேசத்தை கைவிட்டுள்ளது என ஜனாதிபதிஅறிவித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-8)

# கீரிமலை தீர்த்த மடம் விரைவில் புனரமைப்பு

## அமைச்சர் ஜயலத் உறுதி

(யாழ்ப்பாணம்)

போரினால் சிதைவடைந்த கீரிமலை தீர்த்த மடத்தினை திருத்தம் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் கண் சத்திர சிகிச்சைமுகாமை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பின் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அங்கு அவர்மேலும் கூறியதாவது,

குறிகட்டுவான் இறங்கு துறையில் பாரிய நிழல்குடைகளை அமைப்பதற்கான நிதியையும் கீரிமலைதீர்த்த மடப் புனரமைப்பு நிதியையும் அமைச்சினூடாக அனுப்பி வைக்கவுள்ளேன்.

குடாநாட்டு மக்களின் தேவை அறிந்தே நான்சேவை செய்து வருகின்றேன். தென்பகுதி ஊடகங்கள் நான் வடபகுதிமக்களுக்காக அதிகம் நிதியை ஒதுக்குவதாகக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது, எனதுஅமைச்சின் ஊடாகவே என்னாலான உதவிகளை குடாநாட்டு மக்களுக்கு வழங்கிவருகிறேன்.

மக்களின் பணத்தை நான் துஷ்பிரயோகம் செய்யவில்லை இந்த கண்சத்திர சிகிச்சை முகாமுக்குக் கூட அமைச்சின் நிதியே ஒதுக்கப் பட்டுள்ளது.

வடபகுதியில் மருத்துவ வசதிகளை ஏற்படுத்த டல இலட்சம் ரூபாஇன்னும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதுஎன்றார்.

(ஷ-6)

# மக்களின் முயற்சியால் மயானம் பாவிக்க அனுமதி

(தென்மராட்சி)

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பொது மக்களின் பாவனைக்கு படையினரால் தடை செய்யப்பட்டிருந்த சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்துமயானம் நேற்று முன் தினம் முதல் பொது மக்களின்பாவனைக்கு அனுமதிக் கப்பட்டது.

அத்துடன் தடை செய்யப் பட்ட தனங்கிளப்பு வீதியூடாக இம் மயானத்துக்கு பொதுமக்கள் சென்று இறந்தவர்களுக்கான இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளவும் படையினர் தமது அனுமதியை வழங்கியுள்ளனர்.

இதே சமயம் நேற்று முன் தினம் சாவகச்சேரி சிவன் கோவில் பகுதியில் மரணமெய்திய வயோதிபப் பெண் ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக அவரது உறவினர் கண்ணடிப் பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்ல முற்பட்ட சமயம், சோதனைச் சாவடியில் நின்ற படையினர் அதனைத் தடுத்தனர்.

அந்த வேளையில், குறித்த சடலத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்காவிடின், அதனை வீதியில் வைத்துத் தீ மூட்டி எரிக்கப் போவதாகத் தெரிவிக்கப் பட்ட சமயம், படையினருக்கும் பொது மக்களுக்கு மிடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது இதனைத் தொடர்ந்து குறித்த சடலத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்று இறுதிக் கிரியைகளை நிறைவேற்றப் படையினரால் அனுமதிக் கப்பட்டது.

கண்ணாடிப்பிட்டி மயானத்தை பொதுமக்கள் பாவிக்க அனுமதிக்கும்படி கோரி தென்மராட்சி பொது அமைப்புகள் பல முறை கோரிக்கைகள் விடுத்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-77)

# குற்றப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை செய்த நபருக்கு யாழ். நீதி மன்றம் 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சட்டவிரோதமாக கசிப்பு விற்பனைசெய்தவரான ஆத்திகூடி வீதியைச் சேர்ந்த நபரிடம் இருந்தே தண்டப் பணமாக 6 ஆயிரம் ரூபாவும், தர்மப்பணமாகஆயிரம் ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாககசிப்புவிற்பனை செய்த இவரைக் கைது செய்து யாழ் நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் திருமதி ச இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் குற்றப் பணம் செலுத்தியபின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

(உ-6)

# வத்திக்கான் பிஷப் மல்கொம் யாழ். வருகிறார்

(தென்மராட்சி)

புரிந்துணர்வு உடன்படிக்கையின்பின்னர், யாழ்.குடாநாட்டு நிலைமைபற்றி அறியும்பொருட்டும் கத்தோலிக்க மத விடயங்களைக் கவனிக்கும்பொருட்டும் வத்திக்கானிலுள்ள பிஷப் மல்கொம் நாளை 16 ஆம்திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

இவர், இங்கு யாழ். ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களையும் சந்தித்து உரையாடவுள்ளார்.

நாளைகாலை 10.30 மணிக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகளை இணையத்தில் சந்தித்துப் பேசவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-77)

## தப்பிச்சென்ற கைதி அகப்பட்டார்

கடந்த வியாழக்கிழமை புத்தளம் சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற கைதிகளில் ஒருவரை வென்னப்புவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதிகள் தப்பிச்செல்ல சிறைக்காவலர்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் புதிய தகவல் வெளியாகியுள்ளது.

(உ)

# சட்டவிரோத முறையில் மின் பெறுவோரை மடக்க ஏற்றவாகனம் இல்லையாம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரை கண்டுபிடிக்கும் நடவடிக்கைக்கு வாகனம் இல்லாதிருப்பதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மின்சார சபையினால் வழங்கப்பட்ட சனரக வாகனத்தைக் கொண்டு செல்லும் போது, சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் விழிப் படைவதனால் அவர்களை இனங்காண்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோரை பிடிப்பதில் நாட்டுச் சூழ்நிலை காரணமாக பொலிஸார் பின்னடித்து வந்தமை தெரிந்ததே

(ஷ-23)

# தனியார் மயமாக்கலை எதிர்த்து தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்தம்

## இதுகுறித்து 19ஆம் திகதி ஆராய்வு

(கொழும்பு)

அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் கொள்கையை எதிர்த்து அரச திணைக்களங்கள்மற்றும் வங்கிகள் என்பவற்றின் தொழிற்சங்கங்கள் பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட திட்டமிட்டு வருவதாக திணைக்களவங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுவேலை நிறுத்தம் குறித்து ஆராய்வதற்காக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கூடவுள்ளது.

அரசாங்க வங்கிகள், காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கதிணைக்களங்களை தனியார் மயப் படுத்த அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளை கண்டித்து இதுவரை காலமும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களே நடத்தப் பட்டுவந்தன.

இந்நிலையில், இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை விடுத்து, ஒருநாள் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதுகுறித்தே திங்கட்கிழமை ஆராயப்படவிருப்பதாக அவ் வட்டாரங்களில்இருந்துவெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உ-8)

# அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவர் நேற்று முன்தினம் யாழ் மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதவான் திருமதி எஸ். இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப் பட்ட போது,குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(உ-6)

# புலிகளின் குரல் வானொலி எழுத்தாளர்களுடன்சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசிய வானொலியான புலிகளின் குரல் வானொலியில் இதுவரை ஆக்கங்களை எழுதியோருக்கும், எழுதிக்கொண்டிருப்போருக்கும் மற்றும் எழுத விருப்புவோருக்குமான சந்திப்பு ஒன்று எதிர் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கிளிநொச்சி, யாழ்சாலையில் அமைந்துள்ள புலிகளின் குரல் நிறுவன நடுவப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசிய வானொலியான புலிகளின்குரல் வானொலியில் ஆக்கங்களை எழுதியோரையும், எழுதிக் கொண்டிருப் போரையும் மற்றும் எழுத விரும்புவோரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக் கப்பட்டுள்ளது.

(உ)

# ஜம்போறியில் பங்கேற்க 60 சாரணர்கள் பயணம்

(தென்மராட்சி)

எதிர்வரும் 18 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ள இலங்கை சாரணர் இயக்கத்தின் ஜம்போறியில் பங்கு கொள்ளும் பொருட்டு குடாநாட்டில் இருந்து 60 சாரணர்கள் நேற்று காலி பயணமாகினர்.

இவர்களுள் கைதடி முத்துக் குமாரசாமி மற்றும் நாவற்குழி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 9 சாரணர்களும் அடங்குவர்.

(உ-77)

# மருதங்கேணி ஆஸ்பத்திரியை மீள இயக்க 35 இலட்சம் தேவை

(மந்திகை)

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்து இயங்க முடியாது உள்ள மருதங்கேணிவைத்தியசாலையை நவீன வசதிகள் கொண்டதாக மீளக் கட்டமைக்க 35 இலட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மருதங்கேணி மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதைத் தொடர்ந்துஇவ்வைத்தியசாலையைஇயக்க வேண்டிய தேவைஎழுந்துள்ளதும்.

இதனைப் புனரமைக்க வேண்டிய தன் அவசியம் குறித்து பல தரப்புகளில் இருந்தும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதும் தெரிந்ததே.

மேற்படி வைத்தியசாலையை நோயாளர் விடுதி, தாதியர் விடுதி, வைத்தியர் விடுதி மற்றும் அப்புலன்ஸ் வண்டித் தரிப்பிடம் ஆகியன கொண்டதாக புனரமைப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-23)

பாடசாலை அதிபர்களுக்கான

# 10வது முகாமைத்துவ வதிவிடப் பயிற்சிவிரைவில்

(தென்மரபட்சி)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முகாமைத்துவ வாண்மை அபிவிருத்தி நிலையம் 1ஏபி,1சி பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ வதிவிடப் பயிற்சி நெறியினை நடத்தி வருகின்றது.

இது வரை மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ளாத சம்பந்தப்பட்ட பாடசாலைகளைச் சார்ந்தோர் உடனடியாகபயிற்சிநெறிஇணைப்பாளர் க.சாம்பசிவம் கல்வி முகாமைத்துவ வாண்மைஅபிவிருத்தி நிலையம் தேசிய கல்விநிறுவனம், மீப்பே சந்தி, பாதுக்க எனும் முகவரியுடனோ அல்லதுஅதிபர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, எனும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளலாம் எனவும் 10வது பயிற்சிநெறி மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-77)

பரத நாட்டிய அரங்கேற்றம்



ஸ்ரீமதி ஆனந்தஜோதி தர்ஷனன்
அவர்களின் மாணவி
செல்வி விதுபா பாலசுந்தரம்
அவர்களின் அரங்கேற்ற நிகழ்ச்சி
விழாத்தலைவர் திரு. தி. திருக்குமரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்
பேராசிரியர் கலாநிதி இ. குமாரவடிவேல்
(விஞ்ஞான பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

இடம் :~ வீரசிங்கம் மண்டபம்
காலம் :~ 18.08.2002 ~ ஞாயிற்றுக்கிழமை
நேரம் :~ பிற்பகல் 1.35 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. திருமதி. பாலசுந்தரம்

[5825]


# உலகத் தமிழர் ஒருங்கிணைந்து உருவாக்கிய கொடியும் கீதமும் பொது உறவை உருவாக்கும்




## தமிழர் கீதம்

வாழ்க தமிழ் இனம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வாழ்க தமிழ் மறை வாழ்க தமிழ் மறம்
வாழிய வாழியவே (வாழ்க)

வீர பரம்பரை ஆண்ட பரம்பரை
விண்ணையும் அளந்த ஞானபரம்பரை
விண்ணிலும் மண்ணிலும் வீறிடும் கடலிலும்
தன்மானம் காத்திடும் தமிழர் பரம்பரை
(வாழ்க)

எருது வீணை புலி மீன் வில்லென
ஐங்கொடி கொண்டது முன்பேயாகும்
அத்தனை கொடியொடு ஆதவன் இணைந்தே
இக்கொடி காண்பது மகிழ்வேயாகும்
(வாழ்க)

வீரமும் தமிழும் வாழ்க வாழ்க என
வெற்றித் தமிழ்க் கொடியேற்றிடுவோம்
தீரமே கொண்ட திராவிட இனமாம்
தீந்தமிழர் ஒன்றாய்த் தலை நிமிர்வோம்
(வாழ்க)

வாழ்வில் சுதந்திரம் வளம் மிகப்பெருக
வழி பல நாம் கண்டிடுவோம்
வாழ்க தமிழ் இனம் வாழ்க தமிழ் மொழி
வாழி என நாம் எழுந்திடுவோம்
(வாழ்க)

### தமிழர் கொடி

தமிழ் இனத்தில் இன்றுவரை பல அரசர்கள், பல ஆட்சியாளர்கள் பல கொடிகளைப் பறக்க விட்டுள்ளனர். இவ்வாறான பல கொடிகளில், பழமையும் பாரம்பரியமும் வாய்ந்த ஐந்து சிறந்த கொடிகள் எமது சமுதாயத்தை மேலோங்கச் செய்துள்ளன. அந்த ஐந்து கொடிகளும் எருதுக் கொடி, வீணைக் கொடி, வில் அம்புக் கொடி, புலிக் கொடி, மீன் கொடி என்பனவாகும்.

### எருது

இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்ற சிந்து வெளி நாகரீகத்தின் மொகஞ்சதரோ, ஹரப்பா அரசுகளின் கொடியாக எருதுக் கொடி இருந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். எருதுக் கொடி தமிழரின் முதல் கொடியாகக் கருதப்படுகின்றது. எருதைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தி உயிருக்கு உணவு தந்தமைக்காக, அன்று ஆட்சி புரிந்த அரசன், தமது கொடியில் எருதைப் பறக்க விட்டு வெற்றி கண்டு மக்களை வாழவைத்தான். ஆகவே அக்காலத்தில் உணவு தரும் கொடியாக எருதுக் கொடி இருந்தது.

### வீணை

இற்றைக்கு 8,000 ஆண்டுகளுக்கு முன் ஈழத்தில் வீணைக் கொடி பறந்தது. குமரிக்கண்டத்தை மூன்றாவது முறையாக கடல்கொள்ளுமுன், ஈழநாட்டிலிருந்து ஆண்டுவந்த இராவணன் எனும் தமிழ் மன்னன் கொடிதான் வீணைக் கொடி. இராவணன் புஷ்பக விமானம் அமைப்பதிலும், சங்கீதத்திலும் வல்லமை படைத்தவன். இக்கலைகளை கல்வியாக ஏற்று வீணைக் கொடியைப் பறக்க விட்டான். ஆகவே கல்வி தரும் கொடியாக வீணைக் கொடி விளங்கியது.

### வில் அம்பு

இற்றைக்கு 4,000 ஆண்டுகளுக்கு முன்பே சேரநாட்டை ஆண்டு வந்த மன்னர்கள், மக்களைப் பாதுகாப்பதற்கு, வேட்டையாடி உணவு பெறுவதற்கும், வில்லும் அம்பும் பயன்படுத்தினர். அதனால் வில் அம்புக் கொடியை சேர மன்னர்கள் தம் கொடியாகக்கொண்டு பறக்கவிட்டனர். ஆகவே வில்லும் அம்பும் அமைந்துள்ள கொடி மக்களுக்கு பாதுகாப்பைத் தரும் கொடியாக விளங்கியது.

### புலி

இற்றைக்கு 2,500 ஆண்டுகளுக்கு முன்பே சோழ மன்னர்கள் புலிக் கொடியை தம் கொடியாக உபயோகித்து வந்தனர். சோழ மன்னர்களினால் ஆழப்பட்ட நாடுகள் முழுவதும் புலிக் கொடிகள் பறந்தன. அன்று சோழ நாடு மிகவும் வளம் பொருந்தியதாகக் காணப்பட்டதோடு, சோழ மக்களும் வீரம் செறிந்தவர்களாகக் காணப்பட்டனர். மக்கள் வீரம், விவேகம், அஞ்சாமை ஆகியன கொண்டு இருக்க வேண்டும் என்பதற்காக, புலிக் கொடியை சோழ மன்னர்கள் பறக்கவிட்டனர். ஆகவே புலி அமைந்துள்ள கொடி மக்களுக்கு வீரத்தை தரும் கொடியாக விளங்கியது.

### மீன்

தமிழுக்கு சங்கம் அமைத்து அதனை வளர்த்து வந்தவர்கள் பாண்டிய மன்னர்களாவர். அவர்களின் மீன் கொடிகள் அநேகமாக கி.மு. 2015 ஆம் ஆண்டளவில் இருந்தே கூடுதலாகப் பறந்தன. திரைகடல் ஓடியும் திரவியம் தேடியவர்கள் என்பதற்கமைய செல்வத்துக்குரிய சின்னமாக மீன் கொடியை பாண்டிய மன்னர்கள் பறக்கவிட்டனர். ஆகவே மீன் அமைந்துள்ள கொடி மக்களுக்கு செல்வத்தை தரும் கொடியாகும்.

### சூரியன்

இற்றைக்கு 32,000 ஆண்டுகளுக்கு முன் குமரிக் கண்டம் முதன் முதலில் கடல் கொந்தளிப்பால் அழிவுற்றது. அக்காலத் தமிழர்களின் வணக்கச் சின்னமாக சூரியன் அமைந்தது. சூரிய வழிபாடு தமிழர்களின் தொன்று தொட்ட மரபாகும். சூரியன் சக்தியைத் தருவதனால், சூரியன் தமிழர்களின் சின்னமாக தமிழர் கொடியின் நடுவில் அமைந்துள்ளது.

ஒரு மனிதனின் உருவம் போன்று கொடியின் உருவங்கள் அமைந்துள்ளன. சிந்துவெளி எருது, தமிழர் கொடியின் கீழ் உள்ளது. இது தமிழ்ர் பரம்பரையில் முதல் வந்த கொடி. இது மனிதனின் இடக்கால் போன்றது. ஈழநாட்டு வீணை மனிதனின் வலக்கால் போன்றது. சேரர்களின் அம்பும் வில்லும் மனிதனின் இடக்கை போன்றது. பாண்டியர்களது மீன் மனிதனின் வலக்கை போன்றது. சோழர்களின் புலி மனிதனின் தலை போன்றது. சூரியச் சின்னம் மனிதனின் இருதயம் போன்றது.

உணவு தருகின்ற சின்னமாக எருதும், கல்வி தருகின்ற சின்னமாக வீணையும், பாதுகாப்பு தருகின்ற சின்னமாக வில் அம்பும், வீரம் தருகின்ற சின்னமாக புலியும், செல்வம் தருகின்ற சின்னமாக மீனும், இயற்கை அல்லது கடவுளைக் குறிக்கின்ற சின்னமாக சூரியனும் அமைந்து ஆறு வகை வளமாக்கும் உருவங்கள் கொண்டதுதான் தமிழர் கொடி. பஞ்ச வடிவமும், பஞ்ச வர்ணமும் பஞ்ச கொடிகளின் உருவங்களும் கொண்ட தமிழன் கொடி தமிழர் வாழும் அனைத்து இடங்களிலும் பறக்கவேண்டும்.

அன்பு, அகிம்சை, சத்தியம், சகோதரத்துவம், மத ஒற்றுமை, மனிதாபிமானம் தமிழரிடையே மலர வேண்டும். சில தமிழ் இதயங்கள் அறுந்துபோய் இருந்தால், அதனைத் தைப்பதற்கு, ஒற்றுமையை நிலை நாட்ட தமிழன் கொடியைப் பயன்படுத்தவேண்டும். தமிழ் நெஞ்சங்கள் வேற்றுமைகளை மறந்து, தமிழினமாய் ஒன்றுபடுங்கள்.

இவ்வாறாக தமிழர்கள் அன்று முதல் உபயோகித்து வந்த கொடிகளை ஒன்று திரட்டி, தமிழர்களின் ஒரே பொதுக் கொடியாக, தமிழர் கொடி அகில உலகத் தமிழர்களுக்கும் கிடைக்க வழிசெய்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை எல்லோரும் பாராட்டிப் போற்ற வேண்டும். அதன் கனேடியத் தலைவர் வேலுப்பிள்ளையையும் பாராட்ட வேண்டும்.

தலைவர்
**உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம்**
**இலங்கைக் கிளை**

### தமிழர் கீதம்

தமிழர் கீதம் ஒரு நாட்டின் தேசிய கீதமல்ல. இது உலகிலுள்ள எல்லாத் தமிழ் மக்களினதும் பொதுவான கீதமாகும். இக்கீதம் உலகெலாம் பரந்து வாழும் தமிழ் மக்களின், ஆதி முதல் அந்தம் வரையுள்ள சரித்திரத்தையும் தமிழர்களின்

(தொடர்ச்சி 7ஆம் பக்கத்தில்)

# இன்று ஒரு தகவல்

## புயலை வெல்ல முடியுமா?

'அந்த மரத்துக்கு அடியிலே கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தேன். காற்று சுகமாக வீசியது. ஆனந்தமாக இருந்தது.' என்று சொல்வது உண்டு. காற்று மெதுவாக வீசினால் அது சுகமாகத்தான் இருக்கும். அதுவே புயலாக வீசிய தொன்றால் சுகமாகவா இருக்கும்? கடற்கரைக்கு போவது கூட எதற்காக? காற்று வாங்குவதற்குத்தான். புயல் வாங்குவதற்காக இல்லை. புயல் வாங்குவதற்காகக் கடற்கரைக்கு போகிறேன் என்று சொன்னால்... இவர் புயலை வாங்க முடியாது! புயல் இவரை வாங்கிக் கொண்டு போய்விடும். தூக்கிக் கொண்டுபோய் கடலில் போட்டுவிடும். பின்னர் தட்டுத்தடுமாறி நீச்சலிடித்துக் கரைக்கு வந்து சேரவேண்டும். காற்றுவாங்கப் போனவர் மூச்சு வாங்க வீட்டுக்கு வந்து சேர்வதுபோல ஆய்விடும்.

உயிர் வாழ்வதற்குக் காற்று மிகவும் அவசியம்தான். அது மெதுவாக இருந்தால் தென்றல் தவழ்கிறது என்போம், சுமாராக இருந்தால் வீசுகிறது என்போம். புயலாக இருந்தால் சீறுகிறதென்கிறோம், வித்தியாசம் என்பது இங்கு வேகத்தைப் பொறுத்தது. புயல் 'நான் இத்தனை மணிக்கு இந்த இடத்துக்கு வரப்போகின்றேன். எல்லாரும் ஜாக்கிரதையாக இருங்கள்' என்று சொல்லிவிட்டு வருவதில்லை. இருந்தாலும் அது வருவதைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்கு மனிதன் முயற்சி பண்ணுகிறான். இருந்தாலும் இந்த முயற்சியில் முழுவெற்றி கிடைத்துவிட்டதாகச் சொல்ல முடியாது. ஆனாலும் சில அறிகுறிகளை வைத்து ஓரளவுக்கு அதைக் கண்டு பிடிக்கமுடியும்.

சில சாதனங்கள் இருக்கின்றன. அவை கூட புயல் வருவதற்கு ஒரு மணிநேரத்துக்கு முன்னர்தான் அதைக்கண்டு பிடித்துச் சொல்ல முடிகிறது. வேறு சில அறிகுறிகளை வைத்து ஓரளவுக்கு ஊகிக்கலாம்.

கடல் பகுதியில் வேகமான காற்று உருவாகும். அதன் காரணமாக உண்டாகிற கடல் அலைகள் நாலாதிசைகளிலும் சஞ்சரித்து சாதாரணமாகக் காற்றுஅடிக்காத பகுதிகளில் கூடக் கடுமையான அலைகள் உண்டாகும். இதை ஸ்வெல் (Swell) என்று சொல்கிறார்கள். சாதாரண நாட்களில் கடலின் உட்பகுதியில் காணப்படுகின்ற இந்த 'ஸ்வெல்' கள் பரவிப்படர்ந்து கடற்கரை ஓரத்திலும் தென்பட ஆரம்பித்ததென்றால் அங்கு புயலை எதிர்பார்க்கலாம். பின்னர் மேகங்கள் இருக்கிறதே, அதில் பலவகை உண்டு. அதில் சைரஸ் என்பது நார்கள் மாதிரி அமைந்திருக்கிற மேகங்கள். இவை வானத்தில் தெரிந்தாலும் புயலுக்கு ஒரு அறிகுறிதான். புயல் மையம் இருக்குமல்லவா, அதற்குச் செங்குத்தான உயரத்தில் இந்த மேகம் காணப்படும்.

புயல் தீவிரமாகிறபொழுது மேகம் வானத்தை மூடிக்கொள்ளும் ஆதவன் உதயமாகிற நேரம், மறைகிற நேரம் ஆகிய இச்சமயங்களில் வானம் பிரகாசமான சிவப்பு நிறத்திலிருக்கும். புயல் காற்று நூறாவது மைலில் வீசுகிறபொழுது நாம் இருக்கும் இடத்தில் காற்றின் திசையில் மாற்றம் ஏற்படுகிறது. காற்றழுத்தம் திடீரென்று கூடும், குறையும். அடுத்தடுத்து காற்றழுத்தம் குறைந்து கொண்டே போனால் புயல் நம்மைத் தேடி வந்துகொண்டிருக்கின்றது என்று அர்த்தம். சாதாரணமாக வீசிக்கொண்டிருக்கிற காற்றினுடைய திசை அடிக்கடி மாறும் வேகமும் அதிகரிக்கும். புயல் வருவதற்கு முன்னர் உள்ள சூழ்நிலை புழுக்கமாகவும், வறண்டும் இருக்கும்.

சலனமில்லாமல் சூனியமாக இருந்தால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டியது தான். புயலுக்குப் பின் அமைதி என்கிறோமே, அதுபோலவே அமைதிக்குப் பின் புயல்! மைக்ரோ - சீஸ்மோகிராஃப் என்று ஒரு நூதனமான கருவி. கடலில் புயல்காற்றை உண்டாக்கும் சிறு சலனம் கூட இதில் பதிவாகிறது. செய்திக்கோளகள் இப்போது இதற்கு மிகவும் உபயோகமாகின்றன. புயலின் வேகத்தைக் குறைப்பதற்கு அமெரிக்காவில் ஒருசோதனை நடந்தது. ஒருவேவு விமானம் புயல் கண்ணை நோக்கிப் பறந்து போய் சில்வர் அயோடைடு குண்டுகளை பொழிந்ததாம், இதனாலே காற்றினுடைய சக்தியை 31 சதவித அளவுக்கு குறைக்க முடிந்ததாம் என்கின்றனர். என்றாலும் இயற்கையை ஜெயிப்பது கஷ்டம்தான் என்று தோன்றுகிறது. உலகத்தை அழிக்கக்கூடிய அணுகுண்டை மனிதனால் தயார் பண்ண முடிகிறது. ஆனால் அழிக்க வருகிற புயலைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே.

புயல்வேகம் பொன்னம்பலம் என்னுமிவர் இருந்தார். அவர்பேசினாலே இடி இடிக்கிறது போல் இருக்கும். அவர் பேச்சைக் கேட்கிறவர்கள் எல்லோரும் நடுநடுங்கிப் போய் விடுவார்கள். அவர் வீட்டில் சம்சாரத்தைக் கூப்பிட்டு... 'இதோபார்... புயல்வேகப்பிரசாரத்துக்காக புறப்பட்டுப் போகிறேன்... திருப்பிவர, ஒருவாரத்துக்கு மேல் ஆகும் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனார், ஆனால் புறப்பட்டுப் போன பதினைந்து நிமிஷத்தில் அதே வேகத்தில் திரும்பி வந்து விட்டார். என்னவிஷயம் என்று அந்த அம்மாகேட்டார்'' நிஜமாகவே. புயல் வரப் போகிறதாம், அதுதான் பேச்சைஇரத்துச் செய்து விட்டுத் திரும்பி வந்து விட்டேன்,, என்றார் இவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மனித உரிமைகள் என்பது மற்றவரிடம் கேட்டுப் பெறுவதல்ல

## ம. உ. ஆ. கு. இணைப்பாளர் ஜீவேஸ்வரா

(தென்மராட்சி)

மனித உரிமைகள் என்றால், அரசாங்கங்களிடம் இருந்து அனுமதிபெற்றுத்தான் செயல்பட வேண்டும் என எண்ணக்கூடாது.

இவ்வாறு யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதேச இணைப்பாளரான என். ஜீவேஸ்வரா மனித உரிமைகள் கல்விக்கான குழு அமைப்பின் முதலாவது கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்;

ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இக் கூட்டத்தில் பொலிஸ், கடற்படை, சிறைச்சாலை அதிகாரிகள், யு என். எச்.சீ.ஆர், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், பெண்கள் அபிவிருத்தி நிலையம், யாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்குகொண்டிருந்தனர்.

பிரதேச இணைப்பாளரான ஜீவேஸ்வரா அங்கு தொடர்ந்து பேசுகையில்;

ஒவ்வொரு மனிதனும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரகடனத்தில் உள்ள 30 சரத்துக்களும், மற்றைய இரண்டு உடன்படிக்கைகளில் உள்ளவைகளும் தனது பிறப்புரிமை என்று கருதி செயல்படவேண்டும்.

சுதந்திரத்தின் விலை எந்த நேரத்திலும் விழிப்புணர்வுடன் செயல்படுவதாகும். இந்த சுதந்திரம் எனக்கு மாத்திரம் தான் என்று நினைத்து சமூகத்தில் வாழ்பவர் மற்றவருடைய சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிப்பராகிறார்.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தனியாக வாழ முடியாது. ஒரு சமூகத்தில் தான் வாழமுடியும். அப்படி வாழும் போது நான் மட்டும் வாழ்ந்தால் காணும் ஏனையோருக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. எக்கேடு கெட்டாலும் என்ன? நான் எப்படியும் வாழலாம் என்று நினைத்து வாழக்கூடாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வினை அனைத்து மட்டங்களிலும் ஏற்படுத்தும் பொருட்டு நாம் திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளோம். இத்தகைய எமது முயற்சிகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பையும் ஆதரவையும் மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிநிற்கின்றது:

சகல சமூகங்களிலும் வாழும் எல்லா பிரஜைகளினதும் கைகளில் தான் மனித உரிமைகளின் தலைவிதி தங்கியுள்ளது. எனவே நாம் எல்லோரும் இதனை உணர்ந்து செயல்பட வேண்டியது இன்றைய அவசர தேவைகளில் ஒன்றாகும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் இக்கூட்டத்தில் மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன், பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன், பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ். சதிர்காமத்தம்பி ஆகியோர் உரையாற்றினர். (உ-77,43)

## தெய்வீக இசை அங்ரகில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் மூன்றாம் நாளான இன்று, துர்க்காதேவி மணிமண்டபத்தில் எஸ்.ஆர். திருஞான சம்பந்தனின் பண்இசை பக்க வாத்தியங்கள் சகிதம் இடம் பெறவுள்ளது. (உ)

## பிரயாணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் மாவட்டத்தில் இருந்து மாகாண மட்ட போட்டிகளுக்குசென்று திரும்பிய ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோருக்கான பிரயாணக்கொடுப்பனவு இறுதித்தினம்இன்றாகும். (உ-19)

## ஜனாதிபதி செயலகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக்கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை நீக்குவது தொடர்பான திருத்தச் சட்டம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவில்லை என்று ஜனாதிபதி செயலகம் குற்றம்சாட்டியுள்ளது.

அடிக்கடி இடம்பெறும் அரசியல் அமைப்பு திருத்தங்களுக்கு ஜனாதிபதி உடன்படவில்லை என்றும்நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை மாற்றி அமைக்கும் வகையிலேயே திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது. (உ-5)

## ஒருவருடச் சிறை

(யாழ்ப்பாணம்)

20 ஆயிரம் ரூபா பெறுமதியான 6 கதவுகளைத் திருடிய குற்றத்தின்பேரில் யாழ். வாசி ஒருவர் நேற்று முன்தினம் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது ஒரு வருடச் சிறைத்தண்டனையும் 4 வருட ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ-6)

## யாழ் ம. உ. ஆ. கு. இணைப்பாளர் ஜீவேஸ்வராவின் பதவிக் காலம் முடிவடைகிறது

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதேச இணைப்பாளராகக் கடமையாற்றிய என். ஜீவேஸ்வராவின் பதவிக் காலம் இம் மாதத்துடன் முடிவடைகிறது.

பிரதேச ஆணைக்குழுவின் புதிய இணைப்பாளராக ஆர். பி. சந்திர சேகரா செப்ரெம்பர் 1 ஆம் திகதி முதல் பதவியேற்கவுள்ளார்.

இவர் வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணியாற்றி தற்போது யாழ். அலுவலகத்தில் விசாரணை அதிகாரியாகப் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-77)

## பற்சிகிச்சை நிலையம் அமைக்கக் கோரிக்கை

(மந்திகை)

கரவெட்டிப்பகுதியில் பற்சிகிச்சைநிலையம் ஒன்றினை அமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் அண்மையில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாமில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் 20 ற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருந்த போதிலும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இப் பற்சிகிச்சை முகாம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் நலன்கருதிநிரந்தரமாக பற்சிகிச்சை நிலையம் அமைப்பதன்மூலம் மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும்உடனுக்குடன் சிகிச்சையைப்பெறவும் அல்லது பற்களை பாதுகாப்பாக வைத்திருக்கஆலோசனைகளைப்பெறவும் வாய்ப்பாகஇருக்குமெனவும். தெரிவிக்கப்பட்டது. (உ-23)

## தொலைவிலிருந்து இயக்கும் கருவிகளைப் பெறுமாறு அறிவிப்பு

(மந்திகை)

தரைவழிப் பாதை ஊடாக எடுத்து வரப்பட்ட வேளை, முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து பறிமுதல் செய்யப்பட்ட தொலைவில் இருந்து இயக்கும் கருவி (றிமோற் கொன்றோல்) உரிமையாளர்களை அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு சாவகச்சேரி நீதியன்றம் அறிவித்துள்ளது.

தரைவழிப்பாதை ஊடாக கொண்டுவரப்பட்ட இப் பொருட்கள் முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து சோதனையின்போது பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட மேற்படி கருவியை உரியவர்களிடம் கையளிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

60 இற்கும் மேற்பட்ட இக் கருவிகள் உள்ளதாகவும் அவற்றினை உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறும் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார். (உ-23)

# குடிக்கும் நீரின்றி புங்குடுதீவு கால் நடைகள் இறக்கின்றன

(ஊர்காவற்றுறை)

தற்போதைய கோடையால் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக குடிக்க நீரின்றி புங்குடுதீவுப் பகுதியில் கால் நடைகள்இறந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவில் உள்ள குளம், குட்டைகளில் நீர் வற்றி வரண்டு இருப்பதால் அப்பகுதிக் கால்நடைகள் குடிநீருக்கு அலைந்து திரிகின்றன.

இப்பகுதிக் குளங்கள் பல வருடங்களாக புனரமைக்கப்படாது இருப்பதாலேயே இந் நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பகுதிப் பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகப் பணியை வேலணைப் பிரதேச சபை மேற் கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (உ-75)

# ரவூப் ஹக்கீமின் கோரிக்கை

# சமாதான முயற்சிகளை குழப்பும்

## எச்சரிக்கிறார் பௌஸி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலைநடத்த வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோருவதன்மூலம் நாட்டில் தற்போது முன்னெடுத்துச்செல்லப்படும் சமாதான முயற்சிகளை குழப்பக்கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் அமைச்சர் எச்.எம் பௌஸி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிழக்கு மாகாண ஒலுவிலில் சமூக ஆய்வுநிலையம் நடத்திய கருத்தரங்கில் செப்ரெம்பர் மாதம் 25 ஆம்திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும்இல்லாவிட்டால் பாராளுமன்றத்தில் தமக்குள்ள பலத்தை வெளிக்காட்ட நேரிடும்எனவும் அமைச்சர் ராவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கருதியே ஹக்கீம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்வே.பிரபாகரனுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளார்.

ஆனால், தற்போது கிழக்கு பிரதேசங்களில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களின் பாதுகாப்பைபிரதமர் ரணில்விக்கிரமசிங்காவே உறுதிப்படுத்த வேண்டும்எனக் கோருவதில் என்னநியாயம் உண்டெனவும் பௌஸி கேள்வியெழுப்பியுள்ளார். (உ-8)

## விபரங்கள் வெளியீடு

(கோப்பாய்)

2003 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளஆசிரியர் இடமாற்றவிண்ணப்பப் படிவங்கள் சம்பந்தமான விபரங்கள் மாகாண கல்விஅமைச்சுச் செயலாளரினால் வலயக் கல்வித் திணைக்களங்களினூடாகவெளியிடப்பட்டுள்ளன. (உ-59)

## கள்வருக்கு கடூழியச்சிறை

(யாழ்ப்பாணம்)

பெருந்தொகைப்பணம் மற்றும்பெறுமதிவாய்ந்தபொருட்களைக் களவெடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் வாசிகள் இருவர் நேற்றுமுன்தினம் யாழ் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது,குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் ஒருவருக்கு 18 மாத கடூழியச் சிறைத்தண்டனையும்,மற்றையவருக்கு 4 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (உ-6)

## விபரம் திரட்டல்

(சுதுமலை)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள முதியோர்களதும் அங்கவீனர்களதும் விபரங்களை குடும்ப நலசேவையாளர்கள் திரட்டி வருகின்றனர். (உ-252)

# புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்தியர் இல்லை

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு மாவட்டவைத்தியசாலைக்குநிரந்தர வைத்தியர் ஒருவரை இன்னமும் நியமிக்காமையினால், அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மிகவும்கஷ்டமடைகின்றனர்.

மேற்படி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 500 வரையான குடும்பங்கள்,தற்போதைய இயல்புச் சூழலில் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், 2 நாட்கள் மாத்திரமே மேற்படி வைத்தியசாலையின் பணிகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

# நியூசிலாந்து வீரர்கள் இலங்கை வர மறுப்பு

(கொழும்பு)

செப்ரெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஐசிசி மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் நியூசிலாந்து வீரர்கள் மூவர் பங்குகொள்ள மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பாதுகாப்பு நிலைமைகளைச் சுட்டிக்காட்டியே இவர்கள் மறுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர்கள் மூவரினதும் மறுப்புக்கான காரணங்களை நியூசிலாந்து கிரிக்கெட் சபை ஏற்றுள்ளது என்று அந்நாட்டு கிரிக்கெட்சபை நிர்வாக அதிகாரி மார்ட்டின் ஸ்வேடன் தெரிவித்துள்ளார். (உ-3)

# ரஷ்ய நாட்டில் மருத்துவம் பயில எண்மர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ரஷ்ய நாட்டில் மருத்துவம் கற்க விண்ணப்பித்தவர்களில் 8பேர் அப்பயிற்சி நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை தத்தமது கடவுச் சீட்டுக்களுடன்யாழ்.செயலகத்துக்கு உடனடியாக வருமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

- இராஜேஸ்வரன் 237 வி.எம். வீதி, புலோலிமத்தி, பருத்தித்துறை.
- ந. காந்தரூபன் விடத்தற்பளை, மிருசுவில்.
- சு. இரவிவர்மா, நாகலிங்கம் முதலியார் வீதி, பருத்தித்துறை.
- சி. சாயீசன் ஈ-3/8, அன்டர்சன் மாடி பூங்கா வீதி, கொழும்பு -05
- செல்வி மு. மதனாசிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு புத்தூர்.
- சி. நந்தபிரகாஷ் 30/11, அத்தியடி குறுக்குவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
- கே. நிருபன்,இராணிஇல்லம், மாதோணி கரவெட்டி மேற்கு.
- க. சிவச்செல்வன் கல்வத்தை, வதிரி, கரவெட்டி.

(உ-6)

# இளைஞர்- யுவதிகளுக்கு ஊர்காவற்றுறையில் அபிவிருத்திப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால், இளைஞர் - யுவதிகளுக்கான அபிவிருத்திப் பயிற்சி திட்டத்திற்கான பயிற்சியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வேலையற்றுள்ள இளைஞர்-யுவதிகளுக்கு அபிவிருத்திப் பயிற்சி வழங்கும் முகமாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றவிரும்பும் இளைஞர்-யுவதிகள் தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சியில் க.பொ.த சதாரண தரம் படித்த,18 வயதிற்கும் 28வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் இணைந்து கொள்ளமுடியும். (உ-75)

## இராசி பலன்

(15-8-2002)

(ஆடி 30, வியாழன்)

சப்தமி மு.ப. 9.27 வரை
சுவாதி காலை 6.14 வரை
விசாகம் பி.இ. 4 57 வரை
ராகுகாலம்-1.35-3 05
நல்லநேரம்—7.35-9.05

**மேடம்**
திடீர்பயணம், களஸ்திர சுகம், முயற்சிகைகூடும், தொழில்நன்மை

**இடபம்**
சகோதரர்மூலம் உதவி, தொழில்விருத்தி, மன மகிழ்ச்சி, காரியநன்மை

**மிதுனம்**
குடும்பக்கவலை, சிறு வியாதி, முயற்சிதாமதம், தொழில்நன்மை

**கடகம்**
மனக்கிலேசம், ரோக நிலை, போசனசுகம், தாய் வழிஉறவு

**சிங்கம்**
நினைத்தகாரியம்கைகூடும், கூட்டுமுயற்சி, தனவரவு, வாகனசுகம்

**கன்னி**
தொழில்கஷ்டம், இலட்சுமீகரம், முயற்சிதாமதம், குடும்பசுகம்

**துலாம்**
போசனசுகம், முயற்சி கைகூடும், நிலைமாற்றம், சயனசுகம்

**விருச்சிகம்**
உறவினர்சந்திப்பு, பிரயாணம், காரியஅலைச்சல், சுபசெலவு

**தனுசு**
குடும்பமகிழ்ச்சி, காரிய சித்தி, கீர்த்தி, தொழில் சிந்தை

**மகரம்**
அதிகாரம், நல்லமுயற்சி, பணியாளர்உதவி, நல்ல செய்தி

**கும்பம்**
தர்மம், வயிற்றுக் கோளாறு காரியதாமதம், புதியசிந்தை

**மீனம்**
வாகனபயம், சிறுவியாதி, முயற்சிதாமதம், கீட தொல்லை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# இரு மருந்துகளை புதிதாக தயாரிக்கத் தீர்மானம்

(திருகோணமலை)

வடக்கு- கிழக்கு மாகாண ஆயுர் வேத வைத்தியத் திணைக்களம் இரண்டு வகையான மருந்துகளை புதிதாக தயாரிக்க தீர்மானித்துள்ளது.

இதற்காக நிலாவெளியிலுள்ள மேற்படிதிணைக்களத்திற்கு சொந்தமான கட்டடம் பெறப்பட்டு,குளிகைஉற்பத்தி நிலையமாக மாற்றப்படவுள்ளது. (உ-3)

## பொன்னாலை

# வரதராஜப் பெருமாள் இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவம்இன்றுவியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 தினங்கள் தொடர்ந்து மஹோற்சவம் இடம்பெறவுள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் முதலாம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஷ)

## பதிவாளர் நாயக

# திணைக்கள அதிகாரிகள் குழு இன்று யாழ்.வருகிறது

(யாழ்ப்பாணம்)

பதிவாளர் நாயகம் எல்.கே. ரத்னசிறி தலைமையில், பதிவாளர் நாயக திணைக்கள அதிகாரிகள் குழு, இன்று யாழ். பதிவாளர் அலுவலகத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு பதிவாளர் நாயகத்தின் தலைமையில் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கு புதிய முறையில் கணனிமயப்படுத்தப்பட்ட புள்ளிவிபரப் பட்டியல் தயாரித்தல் தொடர்பான பயிற்சி இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தின் சகல விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்களையும் இந்நிகழ்விற்கு தவறாது சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# பிரிவேனாக்களில் தமிழ் மொழி போதனை

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள பிரிவேனாக்களுக்கு 650 தமிழ் மொழி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நீதி,சட்டச்சீரமைப்பு, இன ஒருமைப்பாட்டு புத்தசாசன அமைச்சர் வி.ஜ.மு. லொக்கு பண்டார இதற்கான பணிப்புரையை கல்வியமைச்சுக்கு விடுத்துள்ளார்.

இதற்கமைய பிரிவேனாக்களில் தமிழ் மொழியும் போதிக்கப்படும் என்று கல்வியமைச்சின்பிரிவேனாக்கல்விப் பணிப்பாளர் சங்கைக்குரிய படோவிற்ற பஞ்ஞாராம தேரர் தெரிவித்துள்ளார். (உ-8)

# இந்திய விசாவுக்கான விண்ணப்பங்கள் ஏற்பதில் புதிய நடைமுறை

(கொழும்பு)

கோடை விடுமுறை காலம் காரணமாக இந்தியாவுக்கு செல்லும் இலங்கை யாத்திரிகர்களினதும் உல்லாசப்பயணிகளினதும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந் நிலையில் யாத்திரைகள் சுற்றலாக்கள்,விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் போட்டிகளில் பங்குபற்றுதல் என்பவற்றுக்காக பெருந் தொகையான தனியான மற்றும் குழு விண்ணப்பங்கள் அவற்றை வழங்குவதற்குரிய மிகக் குறைந்த கால அவகாசத்துடன் தூதுவராலயத்துக்குக் கிடைக்கின்றன.

இதனால்ஏற்படும் தாமதத்தையும் ஏமாற்றத்தையும் தவிர்ப்பதற்கு தினமும் பி.ப. 3.30 மணிவரை விண்ணப்பங்களை ஏற்கும் தினத்தைக் குறிக்கும் அட்டைகளை வழங்கும் விதத்தில் தூதுவராலயம் புதிய நடைமுறையொன்றை வகுத்துள்ளது.

அதன்படி குறித்ததிகதி மற்றும்நேரத்திலேயே விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

எனவே விசா விண்ணப்பதாரிகள் தங்கள் வழமையான பயணத்தைநன்குதிட்டமிட்டு குறித்த காலத்துக்கு முன்பாக விசாவுக்கு விண்ணப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (உ)

# கட்டாக்காலி மாடுகளால் மக்களுக்கு பெருங்கேடு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் மேற்குத் திருவடி நிலைப்பகுதியில் அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகளால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளிருந்து வரும் மாடுகளே இவ்வாறு மக்களுக்குச் சிரமம் அளிக்கின்றன.

மேற்படி மாடுகள் கடற்படையினரின் எல்லை வேலியில் உள்ள வாசல்கள் ஊடாக இரவு நேரத்தில் ஊர்மனைக்குள் பிரவேசிக்கின்றன.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் போது மக்களால் விட்டுச் செல்லப்பட்ட மாடுகளே இவ்வாறு பல்கிப் பெருகியுள்ளன.

இதேவேளை,நெல் விதைப்புக் காலம் நெருங்குவதால், விவசாயிகள் மாடுகளின் தொல்லை தீராது தமது முயற்சியில் இறங்குவது எவ்வாறு என்பது குறித்து ஆலோசித்து கவலை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

# உலகத்தமிழர் ஒருங்கிணைந்து . . .

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொன்மையையும் எடுத்துக் கூறுவதோடு, தமிழர்களின் ஆணிவேர் முதல் பரம்பரை பரம்பரையாகக் கொண்ட பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்ற முத்திரையாகவும் அமைந்திருப்பதோடு, தமிழர்களின் எதிர்கால அபிலாசைகளையும் கொண்டதாக அமைந்து இருக்கின்றது.

தமிழர் கீதத்தின முதல் நான்கு வரிகளில், தமிழ் இனத்தின் வாழ்த்தும், தமிழ் மொழியின் வாழ்த்தும், தமிழ் மறைகளின் வாழ்த்தும், தமிழ் வீரத்தின் வாழ்த்தும், கீதத்தில் முன்னே அமைந்து வருகின்றன. இது தமிழர் வணக்க சம்பிரதாயங்களுக்கு அமைய முதல் வாழ்த்துக் கூறுவதோடு, தமிழர்களின் முன்னைய சிறப்புகளுக்குக் கட்டியம் கூறுவதாயும் அமைந்திருக்கின்றது. மகிழ்ச்சியான விடயங்களுக்கு வணக்கம் கூறுவது, வரவேற்பது, வாழ்த்துவது, தமிழர் மரபுடன் கூடிய பண்பாடு என்பதை யாவரும் அறிவர்.

இனம் தோன்றிய பின்புதானே மொழி தோன்றியிருக்க முடியும். ஆகையினால் தமிழரின் இனம் முதலிலே வாழ்த்தப்பட வேண்டும். பின்பு தமிழரின் மொழி வாழ்த்தப்பட வேண்டும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி தமிழன் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தமிழ் மறைகள் பல இருந்த போதும், திருக்குறள் எல்லாவற்றிற்கும் முதன்மை பெறுகின்றது. திருக்குறள் மதசார்பற்ற, மொழிசார்பற்ற, இனசார்பற்ற மனித இனத்திற்கான கீதத்தின் அடுத்த நான்கு வரிகளில், ஆலங்கன்று வளர்ந்து பருத்துப் பல விழுதுகளை உருவாக்கும். அந்த ஆலமரத்திற்கு உறுதியைத் தருவது அதன் விழுதுகள்தான். மனிதனுக்கு உறுதி தருவது அவனது பரம்பரை வாரிசுகள்தான். ஆதியிலே தமிழன் தன்னைத் தானே ஆண்டான். தலைநிமிந்து நின்றான். மெஞ்ஞானத்திலும், விஞ்ஞானத்திலும் தன்னிறைவைக் கண்டான். கப்பலோட்டிய தமிழனாகக் கடலினிலும் தனது ஆதிக்கத்தை, சர்வதேச வணிகத்தை நிலை நிறுத்தினான். திரைகடல் ஓடித் திரவியம் தேடினான். இடைக் காலத்தில் ஏற்பட்ட அன்னியராட்சியின் காரணமாகப் பல்வேறு உளவியல், சமூகவியல் தாக்கங்களுக்கு உட்பட்டுப் பல சிதைவுகளைக் கண்டாலும், அவற்றையெல்லாம் வெற்றிகொண்டு தமிழன் இன்றும் வெட்ட வெட்டத் தழைப்பவனாக, இந்த உலகிலே தன்னை ஒரு இனத்தவனாக மிகவும் சிறப்பாகத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றான். சங்க - காலத்திலே கண்ட, கேட்ட வீரத்தை விடவும், புறநானூறு கூடப் புறமுதுகிட்டு ஓடும் வண்ணம் இன்று தமிழீழத்திலே தமிழனின் வீரத்தையும், விவேகத்தையும் உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

கீதத்தின் அடுத்த நான்கு வரிகளில், எமது இனம் பரம்பரைச் சிறப்பும், முதுமையும், ஆற்றலும், திறமையும் கொண்டு வாழ்ந்த இனம் என்பதை, சிந்துவெளி நாகரீக சின்னமாக விளங்கும் எருதுக் கொடியும், ஈழத்தை ஆண்ட அரசனான சிவபக்தன் இராவணனின் வீணைக் கொடியும், சேரனின் அம்பொடு வில்லுக் கொடியும், சோழனின் புலிக் கொடியும், பாண்டியனின் மீன் கொடியும் பறைசாற்றி நிற்கின்றன. அவற்றோடு தமிழன் வணங்கிய எல்லோர்க்கும் பொதுவான சூரியனும் இணைந்து காணப்படுவது, தமிழன் ஒன்றுபட்டுவிட்டான் என்பதை உலகிற்கு பறை சாற்றுகின்றது. சொந்தச் சகோதரன் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்குகின்ற தமிழனாக மாற வேண்டுமாயின், ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுவதே சிறந்ததாகும்.

ஐம்பூதங்கள் கொண்ட இந்த உலகமும் ஒன்றே! ஐந்து முகம் கொண்ட விளக்கின் ஒளியும் ஒன்றே! ஐந்து புலன்கள் கொண்ட இந்த மனிதனும் ஒருவனே! ஐந்து கொடி கொண்ட தமிழர் பாரம்பரியமும் ஒன்றே! ஐம்புலன்களை ஒற்றுமைப்படுத்துவது வாழ்வில் உயர. இதைத் தெரிந்தவன் வாழ்வில் மலரும் ஒளி விளக்கு! ஆயிரமாயிரம் கரங்கள் அன்புச் சங்கிலியால் பிணைந்து, ஆயிரமாயிரம் காலங்கள் தமிழினம் ஒன்றுபட்டு வாழவேண்டும். மேலும் வெற்றிகள் பல காணவேண்டும் என்ற அந்த வெற்றிக்கு ஒளி தருவதற்காக உதய சூரியன் அமைந்து இருக்கின்றான்.

சூரியனைச் சுற்றித்தான் கிரகங்கள் சுற்றுகின்றன. ஞாயிற்றுத் தொகுதியின் நடு நாயகன் சூரியனே! என்ற உண்மையை கி.மு. 7ம் நூற்றாண்டிற்கு முன்னரே பண்டைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். இந்த உண்மைக்குத் திருஞான சம்பந்தர் அருளிய கோளாறு திருப்பதிகமும் ஒரு சான்றாகும். அதாவது கொப்பேர்னிக்ஸ் என்ற மேற்கத்திய வானவியலாளர் இக்கருத்தைச் சொல்வதற்கு 800 ஆண்டுகள் முன்பே பண்டைத் தமிழர் இதை ஏற்றுக் கொண்டு விட்டனர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

'தமிழர் கோவில்களில் நவக்கிரகங்களை நிறுவும்போது சூரியனை மத்தியில் நிறுவி, அதனை மற்றைய கிரகங்கள் பார்க்கும் படியும், அதேநேரத்தில் மற்றைய கிரகங்கள் ஒன்றை ஒன்று நோக்காத வண்ணமும் நிறுவுவது சம்பிரதாயம். அன்று தொட்டு இன்று வரை தமிழர் சூரியனை வணக்கம் செய்வது வழக்கமாகும். ஆகையினால் எல்லோர்க்கும் பொதுவான சூரியன் கொடியின் மத்தியில் அமைந்திருப்பது பொருத்தமாகும்.

கீதத்தின் அடுத்த நான்கு வரிகளில், அகிம்சையை போதித்த காந்தியடிகளைத்தானே அழித்தார்கள், அகிம்சையை அழித்தார்களா? அன்பைப் போதித்த யேசுவைத்தானே அழித்தார்கள். அன்பை அழித்தார்களா? தமிழர்களையும் பலர் அழித்துக்கொண்டிருக்கின்றார்கள். தமிழ் அழிந்ததா? தமிழ் மறைகள் அழிந்ததா? தமிழ் வீரம் அழிந்ததா? அழிக்கத்தான் முடிந்ததா? ஆயுதங்களைத் தலைகுனிய வைத்த அகிம்சைப் போராட்டங்கள் இம்சிக்கப்பட்ட காலங்களிலெல்லாம் எரிமலையாய் எழுந்தான் தமிழன்! கரிமலையாக்கினான் எதிரிகளை! காத்தான் தமிழ் மொழிதனை! வெற்றிப் பரம்பரை, வீரப் பரம்பரையில் வந்த தீந்தமிழர், ஒற்றுமையாய் தலைநிமிர்வோம் ஒன்றுபட்டு உயர்வோம்.

கீதத்தின் இறுதி நான்கு வரிகளில், விலங்குகள் பறவைகள் சுதந்திரமாக இந்த உலகில் வாழும்போது மனிதனுக்குச் சுதந்திரம் தேவை என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்த சுதந்திரமும் அறிவியலோடு கூடியதாக இருக்கவேண்டும். அறிவியல் அற்ற சுதந்திரம், மனிதனை மிருகத்தை விடக் கூடாதவனாக ஆக்கிவிடும். அந்த அறிவியல், அன்பு கருணை பண்பு கொண்டதாக இருக்க வேண்டும். ஆகையால், எதிர்காலத் தமிழினம் தமிழன் என்று சொல்லித் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமாயின், அதற்கு உலகத் தமிழினம் ஒரு கொடியின் கீழ் திரளவேண்டும். ஒன்று பட்டு வாழவேண்டும்.

ஆதியிலே தமிழன் அகிலத்தை ஆண்டான். வானவியலிலே, திரைகடல் ஓடுவதிலே, நாட்டைக் காப்பதிலே அவனுக்கு நிகராக எவரும் இருக்கவில்லை. ஆதியிலே தோன்றிய தமிழர்கள், அறிவியலிலே, வாழ்வியலிலே, அறநூல்கள் படைப்பதிலே சிறந்து விளங்கினார்கள். அத்தோடு தேனினும் இனிய மொழியான தமிழுக்கு சொந்தக்காரர்களாகவும் விளங்கினார்கள். "தமிழர் என்றொரு இனமுண்டு. தனியே அதற்கொரு குணமுண்டு" என்றவாறு, தனக்கே உரித்தான தமிழ்ப் பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாகவும் விளங்கினார்கள். அத்தகைய தமிழரின் தனித்தன்மையைக் காட்டும் ஒரு கீதம் தான் தமிழர் கீதம்.

தமிழர் கீதம் உலகத்தமிழர்களின் இணைப்புப் பாலம். இக்கீதம் ஒரு தனிப்பட்டவருக்கோ, அமைப்பிற்கோ, அல்லது ஒரு நாட்டிற்கோ உரிய சொத்தல்ல, உலகளாவிய தமிழினத்திற்கு உரிய சொத்து. உலகத்தமிழர் அனைவரும் ஒரு கொடியின் கீழ் திரண்டு, ஒன்று சேர்ந்து வெற்றிகள் பல படைக்க உருவாக்கப்பட்ட கீதமாகும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை மனதில் இருத்தி வாழ்வதற்கு தமிழர் கீதம் வழிகோலும்.

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு நாம் செயற்படவேண்டும். ஆண்ட தமிழினம், மாண்டு மடிய வாழவில்லை. மாறாக ஒன்றுபடுவோம். வென்று உயர்வோம் என்பதற்கமைய, சுதந்திரமாகவம் சுபீட்சமாகவும் வாழ வழிவகுப்போம். எதிர்காலம் தமிழனின் காலமாக இருக்கவேண்டும். ஆகையினால் உங்கள் விழாக்கள் ஒன்று கூடல்களில் இக்கொடியை ஏற்றியும் கீதத்தை இசைத்தும் தமிழர் ஒற்றுமைக்கும் வெற்றிக்கும் வழி அமைக்க உதவ வேண்டும்.



அண்மையில் கோண்டாவில் மேற்கு முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் தமிழ் வேத பாராயண சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் அப்பாப்பிள்ளை அவர்கள் வை. சதீஸ்க்கு பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

## பேராலயப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித மரியன்னை போராலயப் பெருவிழா இன்று திருப் பலி ஒப்புக்கொடுத்தலுடன் ஆரம்பமாகி மாலை தேர் பவனியும் இடம் பெறவுள்ளது. (உ)


## திரைப்பட வழங்குநர் கூ.ச அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகத் திறப்புவிழா எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பலாலி வீதியில் கந்தர்மடம் சந்திக்கு அருகே 249 ஆவது இலக்கத்தில் இந்த அலுவலகம் திறக்கப்படவுள்ளது. இத்திறப்பு விழாவில் அனைத்து ஒளிப்பட நாடா விநியோகஸ்தர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-3)

## நல்லூரான் திருவடிக்கு - 03



### தருவனென ஏர்!

செந்தமிழர் தெய்வமேஉன் தெய்வீகத் தோற்றமே
எந்தமிழர் வாழ்விற்கு ஏற்றமாம் - அந்தமிலாத்
துன்பம் தொடராமல் தூண்டு சுடர்வேலால்
இன்பம் தருவனென ஏர்.

- நயினைச் சோதி -

### நல்லூர் மொழி!

வேத மொழி நல்லூரில் ஒலித்திடும்
நாத ஒலி நல்லூரில் ஒலிக்கும்
வேலின் விழி பாலில் நனைந்திடும்
ஊழின் சுழி உன்னில் மறைந்திடும்

- பு. திலீப்காந்த் -

### அருள் கிடைக்க வழியுண்டா?

நல்லூர் கந்த கோட்டத்து கலியுக
கந்தனே கடம்பனே
இங்கு உன்பால் பக்தி உண்டு
துதி உண்டு அன்பு உண்டு
ஆனால் நம் தேசத்தில் சாந்தி உண்டோ?
சமாதானம் உண்டோ? நல்வாழ்வு உண்டோ?
ஆறு திருப் பதியில் வளர் பெருமானே
உன் அருள் கிடைக்க வழியுண்டோ?

- பிரம்மஸ்ரீ சபா. உமாபதிசர்மா -

### வந்தித்தோம் அருளினைத் தா!

தந்தைக்கு உபதேசம் செய்தவனே எந்தன்
சிந்தைக்கு ஒளியினைத் தருபவனே
முந்திடும் - வினையினைப் போக்கிடும் முருகையா
வந்தித்தோம் அருளினைத் தாருமையா.

- த. அஜந்தகுமார் -

### நம்பி உறங்கினமே!

இன்றிதயம் வாடி, கண்கள் சிந்தியிருக்கின்றோம்
- இன்னும்
ஏன் இரங்கவில்லை என்று கேட்டுத் தவிக்கின்றோம்
உன் நினைப்பினோடு தானே இன்றும் உயிர்க்கின்றோம்
- துன்பம்
ஓட்டி எம்மை வாழ்த்திடடா. . . நம்பி உறங்கினமே!

- த. ஜெயசீலன் -

### நல்லையை நாடு நெஞ்சே!

நல்லை நகர்நாடி நல்ல அருள் வேண்டிச்
செல்ல வேண்டும் நீ என்மனமே!
தொல்லை தாங்காது துவளும் நிலைமாற்ற
வல்ல வேலவனைத் தொழுமனமே!

அல்லல் செய்திட்ட ஆரன்தனை வதைத்த
செல்வன் தனை என்றும் நினை மனமே!
இல்லைக் குறையேதும் என்னும் விதமாக
தில்லைச் சிவனாரின் மைந்தன்
அருள்வானே!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன் -

### வருவாய் மயில் மீதினிலே!

கந்தா கடம்பா வென்றே பாடி
கவிகள் பொழிபவர்கள் கோடி
எந்தாய் தந்தையுமாய் நின்றாய்
எழிலே யுருவெடுத்து வந்தாய்
நந்தா விளக்கனைய வடிவே
நல்லைக் கந்தா தந்திடுவாய் அருளே
வந்தார் குறை கேட்க நாளும்
வருவாய் மயில் மீதிலேறி

- செ. பவானி -

### வண்ணமயில் ஏறிவா!

நல்லைநகர் தனிலுறை வேலவா
நாடிவரும் அடியவர்தம் காவலா
அல்லல்போக்கி எம்மினத்தை ஆளவா
அமைதிகாண இனப்பகைமை வீழவா
எல்லையற்ற இன்னலோடு வாழவோ
ஏதிலியாய் எந்தநாடும் இகழவே
வல்லைமைந்தன் தலைமையிலே விடிவுதா
வணங்கிநின்றோம் மயில் தனில் ஏறிவா!

- நயினை இராகுலன்

# குஜராத் மாநில மக்கள் குறைதீர்க்கும் கலாம்

(புதுடில்லி)

குஜராத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க உடனடி நடவடிக்கைஎடுக்க வேண்டுமென்று இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ பி. ஜே. அப்துல்கலாம்கேட்டுள்ளார்.

வகுப்பு வன்முறையையும் வேறுவகைப் பூசல்களையும் வேரோடுகளைய தீவிர இயக்கமொன்றைத்தொடங்க வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

குஜராத்திற்கு இருநாள் பயணம்மேற்கொண்டபோது, உதவி முகாம்களுக்கு அவர் விஜயம்செய்தபோதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அண்மையில் நிகழ்ந்தவன்முறையினால் அல்லல்படும் மக்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளைநேரில் கண்காணிப்பதற்காகவே அப்துல் கலாம் குஜராத்திற்கு விஜயம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

உதவிப்பொருட்கள்விநியோகிக்கப்படவில்லை என்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மந்தமாகநடை பெறுகின்றன என்றும் குடியரசுத்தலைவரிடம் மக்கள் புகார்செய்ததாகக் கூறப்பட்டதை அடுத்தே மேற்படி விஜயம் மேற்கொள்ளப்பட்டது. (ஷ)

# த.மா.காவில் இருந்து குமாரதாஸ் நீக்கம்

(புதுடில்லி)

தமிழ் மாநிலக்காங்கிரஸ், காங்கிரஸ் கட்சியுடன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த 5சட்டமன்றஉறுப்பினர்களில், கிள்ளியூர் தொகுதி உறுப்பினர் குமாரதாஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

த.மா.கா.தலைவர்ஜி கோவாசன் நேற்று சென்னையில் விடுத்த அறிக்கையில் குமாரதாஸ் சில மாதங்களாகவே தொடர்ந்து கட்சி விரோத செயல்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறியிருந்தார். கட்சியின் ஒழுங்கு கட்டுப்பாட்டு கண்காணிப்புக்குழுபலமுறை அவருக்கு எச்சரிக்கை விடுத்தும் அவர் தமது போக்கை மாற்றிக்கொள்ளாததால் அக்குழு குமாரதாஸை கட்சியிலிருந்து நீக்கிவிட பரிந்துரை செய்ததாகக் கூறினார். (ஷ)

# முஷாரப்புக்கு ஆதரவான கட்சிகள் ஒன்றிணைவு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப்புக்கு ஆதரவானஅரசியல் கட்சிகள் கூட்டணிஅமைத்துள்ளன.

ஐந்துகட்சிகளைக்கொண்ட இந்தத்தேசியக் கூட்டணி, மற்றும் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற பி.எம் எல். கிளறட், இ. அஸாம் ஆகியகட்சிகளும் இதில் அங்கம் வகிக்கின்றன.

கூட்டணியில் உள்ள கட்சிகள் அனைத்தும், பாகிஸ்தானில் தனித் தனியாக போட்டியிடும் என்றும் போட்டியிடும் தொகுதிகள பரஸ்பர இணக்கத்தின் பிரகாரம்பிரித்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதிபாகிஸ்தான் தேசிய சட்டசபை செனட்சபை, மற்றும் மாகாணசட்டசபைகளுக்கான பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# வட - தென் கொரிய பேச்சுக்களில் முன்னேற்றம்

(சியோல்)

வட-தென் கொரியாக்களுக்கிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இப்பேச்சுவார்த்தையின் போது இருநாடுகளுக்கும் இடையிலான படை விவகாரங்கள், வர்த்தக உறவுகள் மற்றும் போக்குவரத்துப் பாதைகளை திறப்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டப்பேச்சுக்களில் பல விடயங்களில் கருத்து முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் வட கொரிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

1950 - 1953 ஆண்டு காலபகுதியில் இரு கொரியாக்களும் எல்லையை பிரித்துக் கொண்டதும், அன்றுதொடக்கம் இரு நாடுகளும்பகைமை பூண்டிருப்பதும்தெரிந்ததே.

கடந்த ஜூலைமாதம்இடம்பெற்ற வட-தென் கொரிய இராணுவக் கப்பல்களின் மோதலைத் தொடர்ந்து, பதற்றம் உக்கிரமடைந்து வந்தது.

ஆனால். தென்கொரியா தான் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக வட கொரியாவுக்குஅறிக்கைவிடுத்திருந்ததை அடுத்து, கடந்த திங்கட்கிழமை முதற் கட்ட பேச்சுவார்த்தை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# இந்தியாவின் சுதந்திர தினம் இன்று

(புதுடில்லி)

இந்தியாவின் 55 வது சுதந்திர தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

தீவிரவாதிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் இந்தியாவின் கேந்திர நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (உ-8)

## சிந்தனை,,

வதற்கு ஏற்ற பயிற்சிகளைச் செய்து வருதல் வேண்டுமென்பதும் உய்த்துணர்ந்து கொள்ளற்பாலன. வயாவிளான் வாலிய தூதனில் 1934 இல் வெளியாகி, முரசொலி வார மலரில் 20 8 1989 இல் மீள் பிரசுரம் செய்யப்பட்டது·

மேலது .ப.113

புறச்சமயங்கள்

ஆனால் பிற்காலத்திலே புறச் சமயங்களைக்கடுமையாகக் கண்டனம் செய்யும் ஒரு நிலை அவருக்கு ஏற்படுவது அவரின்சிந்தனைவளர்ச்சியின் போக்கை நன்குஎடுத்துக்காட்டுகிறது.

'புறச்சமயங்கள் வேதபாகியங்கள் புண்ணியமில்லை. அவை உண்மைச் சமயத்தை அடைய நெறியுமல்ல. நெறி வேத நெறியே அந்நெறிச் செல்வார் மயங்கிஒரோவிடத்துத் தடுமாறிச் செல்லும் மயக்க நெறியே புறச்சமய நெறி அந்நெறியில் சமய மார்க்கமில்லை.

மேலது ப. xvi

(தொடரும்)

# அமெரிக்காவின் அளவுக்கு மீறிய அதிகாரங்களை ஈரான் கண்டிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்கா தனது அளவுக்கு மீறிய அதிகாரங்களை பயன்படுத்தி உலகெங்கிலும் போர்ப் பீதியை உருவாக்கி வருவதாக ஈரானின் ஜனாதிபதி முகமட் ஹதாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நீண்ட காலத்தின் பின்னர் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஈரான் ஜானதிபதி ஹதாமி அங்கு தலைவர்ஹமீர்ஹர்சேயைசந்தித்துப் பேசும்போதே இவ்வாறு குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சர்வதேச ரீதியில் வல்லரசு என்ற காரணத்தால் தனது பலம் குறித்தும் நலன்கள் குறித்தும் தவறான எண்ணத்தை கொண்டுள்ளது.

அதேவேளை, ஈரானை எதிரியாக எண்ணும் அமெரிக்காவின் போக்கையும் அவர் அங்கு கண்டித்துள்ளார்.

'தீமைகளின் அச்சாணி' யாகவே அமெரிக்கா விளங்குகிறதுஎன்று ஈரான்- ஆப்கான் ஜனாதிபதிகள் அண்மையில் சந்தித்து பேசும் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# உலக தரிசனம்

## பலஸ்தீன தீவிரவாதிகளின்

# உறவினர்கள் உடன் வெளியேற இஸ்ரேல் நீதிமன்றம் தடை உத்தரவு

(ஜெருசலேம்)

மேற்குக்கரையோரங்களில் வாழ்ந்து வரும் பலஸ்தீன தீவிரவாதிகளின் உறவினர்களை அவ்விடங்களில் இருந்து உடனடியாக வெளியேற்ற இஸ்ரேல் உச்ச நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

இப் பிரதேசங்களில் உள்ள பலஸ்தீன தீவிரவாதிகளின் உறவினர்களை அப் பகுதியிலிருந்து உடனடியாக வெளியேற்றி காஸா பகுதிக்கு அனுப்புமாறு அண்மையில் இஸ்ரேலின் படை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், பலஸ்தீன தீவிரவாதிகளின் உறவினர்கள் இந்தத் தீர்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம், இவர்கள் உடனடியாகவெளியேற்றப்படுவதற்கு தடை விதித்துள்ளது.

அத்துடன் இவர்கள் வெளியேற்றப் படுவதற்கான காரணங்களை இஸ்ரேலிய படைகள் 15 நாள்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது. (உ-8)

## புதிய தலைவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனிதஆரோக்கிய நாதர் ஆலய புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்ற போது தலைவராக பீற்றர் போல் தெரிவு செய்யப்பட்டார். (உ-262)

## 156 கலைஞர்கள் இணையும் 'ஸ்பாட்டக்கல்'

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் 156 கலைஞர்கள் பங்கேற்கும் 'ஸ்பாட்டக்கல்' நாடக ஆற்றுகை இம்மாதம் 30,31 மற்றும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஆகிய தினங்களில் திருமறைக் கலாமன்ற கலை அரங்கில் மாலை வேளையில் இடம்பெறவுள்ளது. (உ-6)

# பெற்றோர்க்கு உதவிடும் புதுவகைக் கடிகாரம் அமெரிக்காவில் அறிமுகம்

(வாஷிங்டன்)

பிள்ளைகளின் செயற்பாடுகள் குறித்து பெற்றோர் கண்டறிய அமெரிக்காவில் பெற்றோர்களுக்கென கடிகாரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜி பி.எஸ் தொழில் நுட்பத்தின உதவியுடன் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட இச் சிறிய கடிகாரம் அமெரிக்காவின் நகர்புறங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

தமதுபிள்ளைகள்இப்போது எங்கு இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? என்பதை இந்தக் கடிகாரத்தின் உதவியுடன் பெற்றோர் கண்டறிய முடியும்.

தற்செயலாக பிள்ளைகள் காணாமல் போகும் பட்சத்திலோ அல்லது ஆபத்து ஏற்படும் பட்சத்திலோ பொலிஸாருக்கு அறிவிப்பதற்கு வசதியாகஇக்கடிகாரத்தில்ஒரு பொத்தானும் பொருத்தப்பட்டுள்ளது.

4-12 வயதுக்கு இடைப்பட்ட பருவத்தினை உடைய பிள்ளைகளின் விபரங்களை அறிந்து கொள்ளும் வகையிலேயே இந்தக்கடிகாரம் உருவமைக்கப்பட்டுள்ளது. (உ-8)

# அமெரிக்க கலாசார நிலையத்திற்கு மூடுவிழா

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க கலாசார நிலையம், பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு மறு அறிவித்தல் வரை நேற்று முன் தினம் முதல் மூடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின், ஆப்கானுக்கு எதிரான யுத்தத்திற்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்கி வருவது, பாகிஸ்தானின் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்கப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக பாகிஸ்தான் கராச்சி நகரில் இயங்கி வந்த அமெரிக்க உயர்ஸ்தானிகராலயம் கடந்த வாரம் மூடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## காணாமற் போனோர்

# பாதுகாவலர் சங்கக் குழு இன்று பிரதமரைச் சந்தித்துப் பேச்சு

(திருநெல்வேலி)

வடபகுதியில் கைதுசெய்து காணாமற்போனோர் பாதுகாவலர்சங்கப் பிரதிநிதிகள் நேற்று கொழும்பு பயணமாகினர்.

தமது பிள்ளைகள் குறித்த சரியான தகவலை வழங்கக் கோரியும்.

இதுவிடயத்தில்அரசுகாட்டி வரும் அசமந்தப்போக்கையும் கண்டித்து கடத்த திங்களன்று மேற்படி சங்கத்தினர் யாழ். செயலகம் முன்பாக தொடர் மறியல் போராட்டம் ஒன்றினைஆரம்பித்ததும்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர்கள் இது விடயம் தொடர்பாக பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சருடன் சந்தித்து நேரில்பேச்சுவார்த்தைநடத்த வழிவகை செய்து தருவதாக உறுதியளித்ததன்பேரில் அவர்கள்தமது போராட்டத்தினை இடைநிறுத்தியமையும் தெரிந்ததே.

இதன் பிரகாரம் கொழும்பு சென்றுள்ள சங்கத்தின் தலைவர். செயலாளர் உள்ளடங்கிய 6 பேர் கொண்ட குழு, இன்று பிரதமர் ரணில் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன ஆகியோரைக் கண்டு தமது பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

இதேவேளை, இச் சந்திப்புக்கள் பயனுடையதாக அமையாதவிடத்து திங்கள் முதல் யாழ். செயலகம் முன்பாக தொடர் மறியல்போருக்குத் திட்டமிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-43,77)

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு

குறள்

# வலம்புரி

## அரசுக்கு சிக்கல்

இலங்கையின் அரசியலில் இன்ப் பிரச்சினைக்கு முன்னதாகப் பெரும் பிரச்சினையாக இருப்பது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையாகும்.

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா 1978இல் நன்னலம்கருதிக் கொண்டுவந்த நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையானது இன்று நாட்டிற்கே பெருந்தலை இடியைக் கொடுத்துள்ளது. நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதிமுறை ஆளுங்கட்சியும் ஜனாதிபதியும் ஒரேகட்சியாக இருக்கும்போது நாட்டிற்குப் பயன்பாடுடையதாக இருக்கமுடியும். ஆனால் ஜனாதிபதியும் ஆளுங்கட்சியும் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருக்கும் போது, எந்தத்தீர்மானத்தையும் அரசாங்கத்தினால் எடுக்கமுடியாத நிலை ஏற்படும்.

இதேவேளை பொதுத் தேர்தல் நடந்து ஒருவருடத்தின்பின் அரசாங்கத்தை ஜனாதிபதி எந்நேரமும் கலைத்து விடலாம் என்ற அச்சமும் இருக்கவே செய்யும். இத்தகையதோர் சூழ்நிலையில் ஆளுங்கட்சியான ஐ.தே. முன்னணி ஜனாதிபதியின் நிறைவேற்றுஅதிகாரத்தை குறைப்பதற்கு முயற்சி செய்கிறது. இதற்குப்பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை. அதனைப்பெற்றுக்கொள்வது இயலாத காரியம் என்பதும் அரசுக்கு ஓரளவு தெரியுமாயினும், முயற்சி திருவினையாக்கும் என்பதற்கமைய எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைகொடுத்து வேண்டும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது. அரசின் நடவடிக்கைகளை அவதானிக்கும் பொ.ஐ.முன்னணி ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஆதரவு தரமுடியுமென ஒருபெருங்குண்டை அரசின் தலையில் போட்டுள்ளது. இப்போது அரசுக்கு மற்றொரு சிக்கல் தோன்றியுள்ளது.

அதாவது ஜனாதிபதியாக இருதடவைகள் பதவி வகித்த ஜனாதிபதி சந்திரிகா அதிகாரங்களைக் குறைப்பதை விடுத்து ஒரேதடவையில் பதவியை ஒழித்துவிடலாமெனக்கருத, இன்னமும் ஜனாதிபதிக் கதிரையில் இருக்காத பிரதமர் ரணில் அப்பதவியைக்காப்பாற்ற எண்ணுகிறார்.

# சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி தந்த ஆக்கங்கள் கற்றோர் மனங்களைக் கவர்வன

"பண்டிதரவர்களும் நானும் கூடி ஒருமிக்கச் சிந்தித்திருக்கின்றோம். சில பல நூல்களை ஆராய்ந்திருக்கிறோம். ஆட்களைப் பற்றியும் ஊர்ச் சங்கதிகளைப் பற்றியும் பேசியிருக்கின்றோம். ஒவ்வொரு காலத்திலே"

மௌனதவ முனிவர் எனவும் அந்தர்முக அநுபவ சாதகர் எனவும் அவரை அறிந்தாராலே போற்றப்படுகின்ற, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் முன்னாள் உப அதிபர், அமரர் பொ. கைலாசபதியின் நேர் கூற்றே மேலே தரப்பட்டுள்ளது. அவர் தம்மையும் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்களையும் இணைத்துக் கூறியுள்ள இப்பகுதி பண்டிதமணிக்கு 1959 இல் அவர் தமது விரிவுரையாளர்ப் பதவியில் ஓய்வு பெற்ற பொழுது வழங்கப்பட்ட பாராட்டுவிழா மலரிலே வெளியானதாகும். உப அதிபர் பொ.கைலாசபதி தம்மைப் பற்றி எடுத்துரைத்தது எமக்குக் கிடைக்கும் ஒரே ஒரு அகச்சான்று, இப்பகுயை உள்ளடக்கிய சிறு கட்டுரை மட்டுமே என்று நம்புகின்றேன்.

### உலகியலோடு இணைவு

மேலே தரப்பட்டுள்ள பகுதியிலிருந்து பொ.கை. பற்றிய இரு உண்மைகள் மிகத் தெளிவாக வெளியாகின்றன

1. பண்டிதமணியோடு சேர்ந்து சில முதன்மையான பொருள்கள் பற்றிச் சில பலநூல்கள்கொண்டு அவர் சிந்தித்துள்ளார்.
2. உலகத்தோடுஒட்டி ஒழுகுவாராய்ப் பண்டிதமணியோடு ஆட்கள் பற்றியும் ஊர்ச் சங்கதிகள் பற்றியும் உரையாடியிருக்கின்றார்.

'ஒவ்வொரு காலத்திலே' என்ற சொற்றொடரும் இவ்விடத்திலே மிகவும் முதன்மையான இடம் பெறுகின்றது. அதன் மூலம் இரு வினாக்கள் எழுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். அவை எவை?

1. பண்டிதமணியோடு கூடி அவர் சிந்தித்தவைஎவை? எக்காலத்தில்?
2. ஆட்கள் பற்றியும் ஊர்ச் சங்கதிகள் பற்றியும் என்னபேசினர்? எக்காலத்தில்?

இவ் வினாக்களின் அடிப்படையிலே பொ.கை. பற்றி ஆராய முற்படுகையில், அவர் ஒரு காலகட்டம் வரைஉலகியலோடு இணைந்தும் வாழ்ந்துள்ளார். அவரது ஆழ் மனத்திலே தாமரை இலை நீர்த்துளி போன்ற பற்றறு தன்மை இருந்தாலும், அது உள்ளடங்கி உலகியற் பார்வை மேலெழுந்திருக்கின்றது. 1940கள் வரை இந் நிலை இருந்திருக்கலாம் என்பது என் கருத்து.

இதற்கான சில சான்றுகளைக் காட்டுவது பயனுடையது.

I. 1940 ஆம் ஆண்டு தொடக்கம் உப அதிபர் 'கற்பனவும் இனி அமையும்' என்ற முறையில் நூல்களை வாசிப்பதை நிறுத்திக் கொண்டார்."

பண்டிதமணி சி.க., 'அளவெட்டி தந்த அறிவுச் செல்வம்' சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி: ஆக்கமும்

கலாநிதி குகஸ்ரீ

க. சொக்கலிங்கம் எம். ஏ.

ஆளுமையும் பொ.கை. நூற்றாண்டு விழாச்சபை, 2002 ப.5.

II "பொ.கைலாசபதி அவர்கள், அக் காலத்திற் பிரபலமாகவிருந்த எழுத்தாளர்களிடம் காணப்பட்ட தனித் தன்மைகளை, தனித் திறமைகளை விமர்சித்து, வர்ணனைக்குக் கல்கியும், சம்பாஷணைக்கு டாக்டர் சாமிநாதையரும், தனித் தமிழ் நடைக்குச் சுவாமி வேதாசலமும் குறிப்பிடக் கூடியவர்கள் எனச் சொல்லி உதாரணங் காட்டி விளக்குவார்."

இரசிகமணி கனக.செந்திநாதன், 'இலக்கியச் சந்திப்புக்கள்' மேலது. ப.13.

### தருக்க நூல் வளர்ச்சி

பொ.கை. தமது விஞ்ஞான மாணிப் பட்டத்திற்கு எண் கணிதம் (Mathematics பிரயோக கணிதம் (Applied Mathematics), அளவையியல் (Logic) ஆகிய மூன்றையும் கற்றார் என்று தெரிய வருகின்றது. 1933 இல் கலாநிலையத்தின் வெளியீடான ஞாயிறு சஞ்சிகையில் "தமிழகத்துத் தருக்க நூல் வளர்ச்சி' என்ற கட்டுரையை இவர் எழுதியுள்ளார். தொல்காப்பியத்தை இவருக்குக் கற்பிக்க முற்பட்ட பண்டிதமணி அதனை உப அதிபரிடமே தாம் கற்க நேர்ந்தமையைச் சுவையாகக் கூறியது மிகப் பொருத்தமே என்பதற்கு இக் இக் கட்டுரை சிறந்த எடுத்துக் காட்டாகும். தொல்காப்பியப் பொருளிலக்கணத்தினை ஆன்மிகக் கண்ணோட்டத்தில் நோக்கிப் பண்டிதமணிக்குப் புதிய ஒளி பாய்ச்சியது ஒரு புறமிருக்க. தமிழின் இலக்கண இலக்கியங்களிலே மிகச் சிறந்த ஆழமான அறிவும் பொ.கை. வாய்க்கப் பெற்றிருந்தார் என்பதற்கு இக் கட்டுரை எடுத்துக்காட்டாகும். வட்டுக் கோட்டை செமினரியின் தொடக்க காலத்திலிருந்து மேலை நாட்டுத் தருக்கம் ஒரு பாடமாக அறிமுகமாயிருந்ததும், பொ.கையின் ஆசிரியரான சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரே ஒரு தருக்கவியல் நிபுணராய் விளங்கியதோடு, தமிழிலே தருக்க நூல் எழுதியுள்ளார் என்பதும் இவ்விடத்திலே நினைவு கூரத்தக்கது.

சிவபாத சுந்தரனாரின் தமிழ் உரைநடை இலக்கண நெறி கடவாததாயினும் எளிமை பொருந்தியது.ஆனால், அவரின் மாணவராகிய பொ.கையின் நடையோ, பழந்தமிழ் உரையாசிரியர்களின் நடை போன்று கடினமானதாயும்இலக்கண மரபினின்றும் அணுவளவும் பிசகாததாயும் விளங்குவதிலிருந்தும் அவர் எடுத்தாண்டுள்ள வடமொழித் தருக்க நூல்கள், ஆங்கிலத் தருக்க நூல்கள் என்பவற்றை யெல்லாம் நோக்கும் போது அவருக்கு மும்மொழிகளிலும் பேரறிவு அமைந்து கிடந்தது என்பது நன்கு புலனாகின்றது அதே சமயம் அக்கட்டுரையிலே அவரின் உலகியல் நோக்கும் கருதத் தக்கதே.

'வடமொழியில் பரந்த தருக்க நூல்களை ஆராய்ந்து எழுதப்பட்ட தருக்க நூல்களேனும் ஆங்கிலத்தில் பிறாட்லி, பொசாங்கே முதலிய பேராசிரியர்கள் நூல்களை ஆராய்ந்துநூல்களேனும், இளைஞர் தருக்க ரீதியாகப் பேசுவதற்கும் எழுதற்கும் துணையாக வல்ல சிறிய தருக்க நூல்களேனும் தமிழ்மொழியில் இன்னும் எழுதப்படாதது வருந்தத்தக்கதாகும்.

கற்றுவல்ல பெரியோர்கள் இத்துறைகளில் ஈடுபடுதல் வேண்டும். சில ஆங்கில நூல்களைத் தழுவி, தமிழில் ஒரு தருக்க நூல் எழுதுவித்துப் பரிசில் வழங்கித்தமிழ்விருத்தி செய்த அண்ணாமலைச் சர்வகலாசாலையும் தமிழ்வளர்ச்சியிலீடுபடும் ஏனைய ஸ்தாபனங்களும் தமிழன்பர்களும் தக்கோரை ஊக்கப்படுத்தி இத்துறையில் ஈடுபடச் செய்தல் வேண்டும்'

-தமிழகத்துத்தருக்கநூல் வளர்ச்சி, மேலது, ப.109

### சமயமும்தமிழும்

தமிழில் புத்தம் புதிய கலைகள் அறிமுகமாக வேண்டும்என்ற விருப்பம் அவருக்கு இருந்தது என்பதும்.

II. தமிழ் அன்பர்கள் என்பதன் மூலம் தமிழை, மொழியடிப் படையில் அவர் நேசித்து அதன் வளர்ச்சியைச்சமயத்துக்கு அப்பாலும் சிந்தித்த ஒரு காலம் இருந்ததுஎன்பதும்

III. போட்டிகளின் மூலம் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதால் லௌகிக ரீதியான எதிர்பார்ப்புக்களும் தவறானவையல்ல என்பதும், அக்கால கட்டத்தில் அவருக்கு இருந்தன எனக் கொள்வதில் தவறில்லை.

ஆனால், காலப்போக்கில் அவரது உள்ளமானது ஆன்மிக உச்சங்களைத் தொட்டு, அதுகால வரை அமுங்கியிருந்த இறையியலை முழு வீச்சுடன் வெளிவரச் செய்து விட்டது. இதற்குப் பின்வரும் மேற்கோள் சான்றாகும்.

I. 'மொழிப்பற்று மூடநம்பிக்கையில் தோன்றி வெறும் அபிமானம் என்ற நீரில் வளர்ந்து மொழிவெறியாகிய நச்சுக்கனி தருவதை அவதானித்த கைலாசபதி தம்முடன் பழகிய ஒரு சிலருக்கு அதன் தாக்கங்கள் பற்றிக் கூறியதாகவும் அறிகின்றோம்.'

செல்வி லலிதாமினி முருகேசு, கைலாசபதியின் தமிழ் பற்றிய, விசேடமாகத் தொல்காப்பியம் பற்றிய கருத்துக்கள், ஆய்வேடு(M.Phil), இயல் 4.ப 63 (அச்சேறாதது)

II. 'அவர் சமயம் வேறு; தமிழ் வேறு என்று பார்ப்பதில்லை. இரண்டையும் ஒன்றிணைந்த பார்வையில் நோக்கினார்.'


ஷெ ஆய்வேடு ப.151

பொ.கை.மெய்கண்ட சாத்திரங்கள், திருமுறைகள் என்பவற்றைத் தமது பாலியவயதிலிருந்து கசடறக் கற்றார் என்பதையும், முதலில் கணித ஆசிரியராய்த் தாம் ஏற்றுக் கொண்ட இரத்தினசபாபதி அவர்களையே பிற்காலத்தில் தமது ஞான குருவாகவும் ஏற்றார் என்பதும் இந்நூலிலே ஆங்காங்கே எடுத்துக் காட்டப்படுகின்றன. இவற்றோடு புறச்சமயங்கள், புறச்சமயங்களாகிய பரபக்கங்களில் அவருக்கு நன்கு தேர்ச்சியிருந்ததையும் அவற்றின் இருப்புக்களை அவர் அங்கீகரித்ததையுங் கூட நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. 'உண்மைச்சமயமும் கட்டுச் சமயமும்' என்ற கட்டுரை மூலம் இவ்வுண்மை புலனாகின்றது.(1939)

'இதுகாறும் கூறியவற்றால் மக்கள் தத்தம் கட்டுச் சமயங்களில் மிதமிஞ்சிய அபிமானங் கொண்டு ஏனையகட்டுச்சமயிகள் யாவரையும் இகழ்தல் தகாதென்பதும் ஒவ்வொரு கட்டுச் சமயத்திலும் உலோகாயிதம் முதற் சைவர்கள் ஈறாகப் பல திறத்தினராய உண்மைச் சமயிகளிருத்தல் கூடுமென்பதும் மனத்துக் கொண்டு அவ்வச் சமயத்திலுள்ள பெரியோர்களை மதித்துநடத்தல்வேண்டுமென்பதும் ஒவ்வொருவரும் தத்தம் உண்மைச்சமயம்- அஃதாவது வாழ்க்கையின்இலட்சியங்களைக் கொண்டு வரையறுக்கப்படும் சமயம் இது வென்பதை இயன்றளவு ஆராய்ந்து தன்னிலைமையை ஒரு சிறிதெனினும் உயர்த்திக் கொள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்



இராமர், கிருஷ்ணர், சாயிபாபா ஆகியவர்கள், தாம் அணிந்திருக்கும்உடைகளின் காரணமாக வெவ்வேறாகத் தோற்றமளித்தாலும் அந்த மூன்று தோற்றங்களும் ஒரே பரம் பொருளுடையதேயாம், என்மீது நம்பிக்கை வையுங்கள். தவறாக வழி நடத்தப்பட்டு பிழையிலும் நஷ்டத்திலும் செல்ல வேண்டாம். இந்த மாபெரும் கட்டடமோ அல்லது அதனிலும் பாரிய கட்டடங்களோ இங்கு அழைக்கப்படுவோரின் தொகையை அடக்குவதற்குப் போதியதாக இருக்கமாட்டாத ஒரு காலம் வரும். எதிர்காலத்தில் கேட்போர் கூடத்தின் கூரை ஆகாசமாகவே இருக்க நேரிடும். நான் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்லும்போது எனது மோட்டார் வண்டியையும், வானூர்தியையும் கூடத் தவிர்க்கவேண்டியேற்படும். நான் ஆகாயத்தினூடாகவும் செல்ல வேண்டியேற்படும். ஆம். அதுவும் நடக்கத்தான் போகிறது! என்னை நம்புங்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# கண்காணிப்புக் குழு உப தலைவர் நேற்று சு. ப. தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

## வன்னிக்கான தொலைத் தொடர்பு குறித்து ஆராய்வு

(வவுனியா)

போா நிறுத்த கண்காணிப்புக் குழு உபதலைவர் பொக்லன்ட் தலைமையிலான குழுவினர் நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச செல்வனைச் சந்தித்துப் பேசசுநடத் தியுள்ளனர்.

நேற்றுக்காலை இலங்கை இராணுவத்தினருக்குச் சொந்தமான விசேட உலங்குவானூர்தி மூலம கிளிநொச் சியை சென்றடைந்த இவர்களை விடுதலைப்புலிகளின் முக்கியஸ் தர்கள் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான பேச்சுக்கள் பி.ப 1மணிவரையும் நீடித்தது.

இச்சந்திப்பின்போது கண்காணிப்புக் குழுவின் சார்பில் கணகாணிப் புக்குழு உப தலைவர் பொக்லன்ட, பீற்றர் கொலின் மற்றும பீற்றர் ஹண்டியஸ் ஆகியோர் கலந்து கொணடனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்ட விடயங்கள் எதுவும் வெளியிடப்படாதபோதும் விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்தை உடனடியாக ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பது குறித்து நோர்வேயில் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வடுதலைப் புலிகளின வன்னித் தலைமைகளுமிடையிலான தொலைத் தொடர்பு வசதிகள் குறித்தும ஆராயப்பட்டிருக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

## எரி பொருள் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எரி பெருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத் தாபனம் அறிவித்துள்ளது.

ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 27ரூபா 50சதத்தில் இருந்து 28ரூபாவாகவும், 1லீற்றர் மண்ணெண்ணெய் 20ரூபா 40சதத்தில் இருந்து 21ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பெற்றொலின் விலையில் எந்த வித மாற்றமும் செய்யப்படவில்லை.

இந்த விலை அதிகரிப்பு30 நாட்கள் அமுலில் இருக்குமென்று பெறறோலியகூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

# இன்று மடு மாதாவின் திருநாள் திருப்பலி

## 2 லட்சம் மக்கள் கூடுவர்

(மன்னார்)

மடு தேவாலயத்தில் இன்று வருடாந்த மாபெரும் திருவிழா கொண்டாடப்படவுள்ளது.

கடந்த 6ம் திகதி கொடியேற்றததுடன் ஆரம்பம் ஆகிய திருவிழாவில் இன்று 6.30 மணிக்கு கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி அதி மேற்றானியார் பேரருள். திரு கலாநிதி தோமஸ் ஜெரோஸ், வேத பேரவையின் செயலாளர் நாயகமும் இரத்தினபுரி மறை மாவட்ட அதி மேற்றானியாருமான மெலகந் ரஞ்சித், மன்னார் மறை மாவட்ட ஆயர் ராஜப்பு ஜோசப், யாழ் மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் உட்பட 100 அருட் தந் தையர்கள் திருவிழா கூட்டுத்திருப் பலியை ஒப்புக் கொடுப்பர். இதனைத தொடர்ந்து மடு மாதாவின் திருச் சொரூப பவனியும் இடம் பெறும்.

இத் திருவிழாவைக்காண பல் வேறு பகுதிகளில் இருந்தும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மடு தேவாலயத்திற்கு சென்றுள்ளனர்.

(ந-5)

# யாழ். முதல்வர் தாக்கப்பட்டதற்கு சபை உறுப்பினர்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை முதல்வர் செ.கந்தையன் தாக்கப்பட்ட சம்பவத்தை யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

நேற்று மாநகர சபை அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மாநகர சபை உறுப்பினர்கள் தமது வருத்தத்தையும் கண்டனத்தையும் வெளியிட்டனர்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் புளொட் அமைப்பைச்சேர்ந்த மு.தவநாதன், முகமட் பசீர், எஸ். ஜெயச்சந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச்சேர்ந்த மனுவல் மங்களநேசன், மற்றும் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த எட்வேட் மோசஸ், மைக்கல் யேசுதாசன், எம். கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்கள் அனைவரும் முதல்வர் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்ததுடன் மாநகரசபை நிர்வாகச் செயற்பாட்டில் குறைபாடுகள் இருப்பினும் அதற்காக சகாக்கள் சகிதம் அலுவலகத்திற்குள் புகுந்து பொறுப்பான பதவி வகிப்பவரை தாக்குவது ஜனநாயகத்திற்கு உரிய செயற்பாடு அல்ல என்றும்,

எத்தகைய பிரச்சினைகள் ஆயினும் அதனை சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராய்ந்திருக்கலாம் என்றும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

அத்துடன் முதல்வர் தாக்கப்பட்ட சம்பவம் மாநகர சபை உறுப்பினர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கி விட்டது என்று அச்சம் தெரிவித்தனர்.

மேலும் தமது பாதுகாப்பை உறுதி செய்யும்படி பொலிசாரிடம் முறையிடப்போவதாகவும் குறிப்பிட்டனர்.

இதேவேளை முதல்வர் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டிக்கும் வகையிலும், தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் வகையிலும்,

இன்று மாநகர சபை உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளதாகவும்,

இப்போராட்டம் நாளை ஊழியர் மட்டம் வரை விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-19)

# வட - கிழக்கு முஸ்லிம்களுக்கு கிடைக்கும் உரிமைகள் என்ன?

## ஸ்ரீ. மு. கா பிரதமரிடம் கேள்வி எழுப்புகிறது

(கொழும்பு)

வடக்குக்,கிழக்கு மாகாணங்களில்வாழும் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் என்ன என்பதை பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்கா தெளிவுபடுத்த வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

நேற்றுக் காலை பாராளுமன்றக் கட்டடத்தில் நடை பெற்ற சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமருக்கும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்குமிடையில் அடுத்த வாரம் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் இது தொடர்பாக இன்றும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றக் குழு ஆராயவுள்ளதாகவும் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (இ-5)

## நோர்வே பேச்சு விபரம்

# வன்னிக்கு அறிவிக்க தொலைத் தொடர்பு வசதி

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நோர்வே தலைசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினருக்கும் இடையில் பல மணிநேர பேச்சு

# நோர்வேயின் தலைநகரில்...

புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கிடையில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தை நேற்றுக்காலை ஆரம்பமாகியது.

இப்பேச்சுவார்த்தையில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் கடந்த பெப்ரவரி மாதம் 22ம் திகதி கைச்சாத்திடப்பட்ட நிரந்தரப் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அமுலாக்கம் மற்றும் அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் கட்டம் கட்டமான ஒழுங்கு நடவடிக்கைகள் சிறப்பாக நடத்தப்பட்டனவா என்பது குறித்தும் ஒப்பந்த அமுலாக்கத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் குறித்தும் விரிவாக பேசப்பட்டது.

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி அடுத்த மாதம் 13ந் திகதிக்கும் 15ந் திகதிக்கும் இடையில் தாய்லாந்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளமை இலங்கையின் சமாதான முயற்சியில் வலுவான ஓர் கட்டத்தை எட்டிவிட்டதையே எடுத்துக்காட்டுகிறது.

நீண்டகால அமைதியின்மைக்கும் முட்டுக்கட்டைக்கும் தீர்வு காணும் வகையில் இச்சந்திப்பும் பேச்சுக்களும் இடம்பெற்றுள்ளன.

இப்பேச்சுவார்த்தை விபரங்கள் வெளியிடப்படாமை இரகசியமாகப் பேணப்படுகின்ற போதும் வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்திற்கு பேச்சுக்கள் குறித்த விடயம் உடனுக்குடன் அறிவிக்கப்படுகிறதாகத் தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க தாய்லாந்துப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வன்னிக்குச் செல்வர் என்றும் இதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய ஓஸ்லோப் பேச்சுவார்த்தைகள் சமுகமான சமாதாத்தை எட்டக்கூடிய நம்பிக்கையுடன் நடை பெற்றதாக மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. (இ)

## கடற்...

புலிகளுடனும் அரசுடனும் பல கட்டங்களாக மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் [illegible]வே இந்த இலக்கப்பாடு [illegible] குறிப்பி[illegible] (ந-5)

தகவல் தொழில் நுட்பப் பூங்கா
272,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கும் அரசுத் தரப்புப் பிரதிநிதிக ளுக்கும் இடையில் நோர்வே தலை நகர் ஒஸ்லோவில் நடை பெறும் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக புலிகளின் வன்னித் தலைமைக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும் வகையில் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமாதானப் பேச்சு வாாத்தைக் கான அடுத்த கட்ட நகர்வு குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோ

தலைமையிலான குழுவினருக்கும் இடையில் பல மணிநேர பேச்சு வார்த்தைகள் நடை பெறுகின்றன.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது சில முக்கிய விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கவும், பேச்சு வார்த் தையில் எடுக்கப்படும் தீர்மானங் களை புலிகளின் வன்னித்தலை மைக்கு உடனுக்குடன் அறிவிக் கவுமே தொலைத் தொடர்பு வச திகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (த)

கும் 15ந் திகதிக்கும் இடையில் அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடை யில் தாய்லாந்தில் முதற்கட்ட சமா தானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப் பது எனவும் இணக்கம் காணப்பட் டது.

அத்துடன் இவ்விடயம் குறித்து இறுதி முடிவெடுக்கும் பொறுப்பை நோர்வே அரசிடம் ஒப்படைக்கவும் இரு தரப்பினரும் இணக்கம் தெரி வித்தனர்.

முதற்கட்டப் பேச்சுவாரத்தையை அடுத்து விடுதலைப்புலிகளிடம் வடக் குக்கான இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பது குறித்து பரிசீலிப்பது என்பதிலும் இணக்கம் காணப்பட் டதாகத் தெரியவருகிறது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இருந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக பொதுக்கட்டடங்கள், பாடசாலைகள் மற்றும் ஆலயங் களில் தங்கியிருக்கும் படையினர் உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுப்பது என்ற முடிவும் உறுதியாக எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவரு கின்றது.

இதேவேளை 19 வருடகால யுத் தத்திற்கு அமைதி வழியில் தீர்வு காணும் நோக்கில் விடுதலைப்புலி கள் அமைப்பின் முக்கிய பிரமுகரு டன் உத்தியோக பூர்வமான இலங்கை அரசதரப்பு அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர் ஒருவர் நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் புலிக ளின் அரசியல் ஆலோசகர் கலா நிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்

## சமாதான..

பெறவேண்டும் என்றும் கூறினார்.

நோர்வேயில் இடம்பெறும் பேச் சுவார்த்தையில் வடக்குக் கிழக்கு மக்களின் அரசியல் யாப்பு உரிமை களை பாதுகாப்பது பற்றி ஆராயப் படுவது மிகவும் அவசியமானது.

அதேவேளை அரசியல் யாப்பில் ஒரு சில திருத்தங்களை கொண்டு வருவதை ஜனாதிபதி ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார். நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனா திபதி முறையை ஒழித்துக் கட்டக் கூடிய ஒரு திருத்தத்தையே ஜனா திபதி ஏற்றுக்கொள்வார்.

நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்ப தையே ஜனாதிபதி விரும்புவதாக வும், எந்தவொரு அரசயில் கட்சியுட னும் பேச்சுவார்த்தையில் ஈடுபட ஜனா திபதி தயாராக இருப்பதாகவும் ஹரீம பீரிஸ் மேலும் அப் பத்திரிகையா ளர்கள் சந்திப்பில் கூறியுள்ளார் (இ)

## பாராளுமன்றுக்கு...

வாறு செயற்படுத்துவது என்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

3மணி நேரமாக இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பகுதி பகுதியாகச் சென்று கலந்துரையா டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சந்திப்புக்களை அடிக்கடி ஏற்படுத்திக்கொள்வதற்கு ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள் ளதாகவும் தெரவிக்கப்பட்டுள்ளது. (த)

## சுழல்...

வருகை தருவர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இக் கிரிக்கெட் போட்டி எப்போது எங்கு நடைபெறும் என்பதை விரை வில் அறிவிப்பதாக ஜனசக்தி காப் புறுதி நிறுவனத்தினர் தெரிவித்துள் ளனர். (த)

272,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-3641 itp@sltnet.lk

அரச நிறுவனமான தொழில் நுட்பப் பூங்காவில் உயர்தர வகுப்பில் சித்தி எய்திய மாணவர்களுக்கான ஒரு விசேட பயிற்சி நெறி ஆரம்பிக்க இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

**Diploma in Information Technology**

இரு பிரிவுகளாக நடை பெறும்
(காலை, மாலை)
ஆரம்பம் : 26-08-2002
நேரம் : 10 மணி

4 மாதங்கள்
கட்டணம்: 4750/-

இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை......

- ★ Fundamental to Computer System
- ★ Introduction to Word Processing
- ★ Introduction to Spread Sheet Management
- ★ Introduction to DBMS
- ★ Introduction to Graphics Designing

இப் பயிற்சி நெறியில் இணைபவர்களுக்கு முற்றிலும் இலவசமாக இணையம் சம்பந்தமான விளக்கம் கொடுக்கப்படும்

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
மேலும் விபரங்களிற்கு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை உறுதிப்படுத்தவும்

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை [illegible] ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 15.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.